# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone: No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு பங்குனிமாதம் 16-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 12 | 11-ம் இலக்கம்


# கத்தோலிக்க பாடசாலைகளுக்குப் புகழ்மாலை

## நைஜீரிய பிரதமர் கத்தோலிக்க பாடசாலைகளைப் போற்றுகின்றார்

நைஜீரியாவின் பிரதமரான சேர் அபுபக்கர் தாபவா பலேவ அவர்கள் கத்தோலிக்க பாடசாலைகளின் சேவையைப் புகழ்ந்து பேசியபோது: தான் ஓர் முஸ்லீமாக விருந்தபோதும், தனது பிள்ளைகளைக் கத்தோலிக்க பாடசாலைக்கே அனுப்பியுள்ளார் என்று கூறினார். மேலும் மத்திய மேற்கு ஆபிரிக்கா பரிசுத்த ஸ்தானத்துடன் நெருங்கிய தொடர்புகள் வைக்க எண்ணியுள்ளதாக அப்போஸ்தலிக்க ஸ்தானபதியான அதிவந்தனைக்குரிய பிக்னேடொலி ஆண்டகை அவர்கட்கு அவர் தெரிவித்துள்ளார்.

நைஜீரியாவின் வடபகுதியில் கத்தோலிக்கர் 630 பள்ளிகள் நடத்துகின்றனர். அவற்றில் 1,600 ஆசிரியர்கள் போதிக்கின்றனர். 75,000 மாணவர்கள் கல்வி பயிலுகின்றனர். அப்பகுதியிலுள்ள பள்ளிகளுள் இவை மூன்றில் ஒரு பங்காகும்.

## கத்தோலிக்கர் கல்விக்கு ஆற்றிய சேவைகளைப் பாகிஸ்தான் பாராட்டுகின்றது

பாகிஸ்தானில் கத்தோலிக்கருடைய உதவியுடன் அரசாங்கம் முன்னேறுகின்றது. பெரும்மாற்றங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

"கல்வித்துறையில் கத்தோலிக்கரும் அரசாங்கமும் முன்னேற்றப்பாதையில் ஒன்றுசேர்ந்து இயங்க முடியாது என்று சிலர் எண்ணுவதற்குக்காரணம்தெரியவில்லை"—இவ்வாறு பாகிஸ்தான் கல்வி மந்திரி திரு. ஹபிபூர் றெமான் அவர்கள் கராச்சியில் சம்பத்திரிசியார் கல்லூரியின் விஞ்ஞான கூடத்தைத் திறந்து வைத்துப் பேசியபோது குறிப்பிட்டார்கள். மேலும் அவர் பேசுகையில், "கத்தோலிக்கர் கல்வித்துறையில் ஆற்றியபணியை அரசாங்கம் நன்குஅறியும். நாம் பாப்பரசரது ஸ்தானபதியுடன் கலந்துகொண்டு உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். எனவே, அரசாங்கத்தோடு கத்தோலிக்கரும் கல்வித்துறையில் இணைந்து முன்னேறுவதற்கு எதுவிதத்தடையும் இருக்கவே முடியாது என்றார்."

மாணவர்களுக்கு அவர் குறிப்பிட்டுக் கூறியதாவது: "நீங்கள் இந்த அழகான கல்லூரியையிட்டுப் பெருமைப்படவேண்டும். சம்பத்திரிசியார் கல்லூரி நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும்."

கல்விமந்திரியவர்களை வரவேற்றுப்பேசிய கல்லூரி அதிபர், "சம்பத்திரிசியார் கல்லூரியானது இந்தத்தலைநகரிலே தேசியகல்வித்திட்டத்துக்கமைய கத்தோலிக்க கல்விச்சபையின் தாராளமான உபகரிப்பினால் கட்டப்பட்டதாகும்" என்று குறிப்பிட்டார். "சுதந்திரம் பெற்றதிலிருந்து கத்தோலிக்க ஸ்தாபனங்கள் இந்த நகரத்தில் விருத்தியடைந்துகொண்டே வந்திருக்கின்றன. இன்று கத்தோலிக்க கல்விச்சபைக்கு 18 ஆரம்பபாடசாலைகளும், 7 கனிஷ்ட பாடசாலைகளும், 3 கல்லூரிகளும், உண்டு. இவற்றுள் 480 ஆசிரியர்களும், 11,700 மாணவர்களுமுளர். எங்கள் நாடு கல்வித்துறையில் பலமுட்டுக்கட்டைகளை எதிர்நோக்கியுள்ளது. கல்வித்துறையில் ஏற்பட்டுவரும் பிரமாண்ட

[தொடர்ச்சி 8-ம் பக்கம்]

## புனிதவளனார் புகழ்ச்சிப் பஞ்சகம்

அன்னைமரி வாழ்த்தும் அருட்கடலே! மாநிலத்துக்
கன்னியரின் காவலனே! காரிருளில் — என்னிதயம்
வந்து நிறைந்து வளர்புனித சக்திநிலை
தந்தருளச் செய்தேன் தவம்.

●

பொற்பு கருணைமிகு போதமுயர் மாதவனே!
கற்பே யுருவான காரணனே! — அற்புதனே!
துன்பப் பனித்துளிக்கோர் சூரியனே! நின்னடிகள்
அன்பின் இதயத் தனி.

●

சுத்த மனமலரின் தூயவனே! இவ்வுலகிற்
கைத்தொழிலின் மேன்மைதனைக் கண்டவனே!
— மூத்திநிலத்
தேம்பா வணியே! திருவளனே! தூதகணம்
தாம்பரவ நின்றாய் தனி.

●

காசினிக்கு ரட்சகனார் கைத்தாதை யாயமைந்த
தேசுருவின் தெய்வத் திருமுதலே! — சூசையெனப்
பக்தகுழாம் நெஞ்சிற் பதமிருத்திப் போற்றுகின்ற
உத்தமனே! எந்தன் உயிர்.

●

தேவை மறந்தெனது தேகம் நினைவாகிப்
பாவக் கடலிற் படிந்துழன்று — நாவினிலே
நல்லவனாய் நாட்டில் நடிக்கின்றேன் காத்தருள்வாய்
வல்லவனே! என்நெஞ்சில் வந்து.

"ஜெயம்"

## தமிழ்ப்பேசும்மக்களின் போராட்டம் வளர்கின்றது

தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைப்போராட்டம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திரிகோணமலை ஆகிய இடங்களில் சென்ற வாரத்திலும் பார்க்க இப்போது அதிகமும்முரமாக, ஆனால், அமைதியாக நடைபெற்று வருகின்றது. இந்த வாரத்தில் கிராமியமக்கள் அதிகமாகச் சத்தியாக்கிரகத்தில் பங்கெடுத்துள்ளனர். தலைவர்களால் வகுக்கப்பட்ட ஒழுங்கின்பிரகாரம் வட்டாரம் வட்டாரமாகப் பல்லாயிரக்கணக்கான சத்தியாக்கிரகிகள் நாள்தோறும்வந்து குவிந்துகொண்டிருக்கின்றனர். விவசாயிகள், தொழிலாளிகள், வர்த்தகர்கள், வழக்கறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், அனைவருமே இவ்வியக்கத்தில் ஈடுபடுகின்றனர். ஆண்களும் பெண்களும்கூட கொட்டும் மழையைக் கூடப் பரவ[illegible] யாக்கிரகத்தைத் தொடர்ந்து நடத்துகின்றனர். அடுத்துவரும் 20-ம்திகதியிலிருந்து சத்தியாக்கிரகஇயக்கத்தை மன்னார்ப்பகுதியிலும் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

சத்தியாக்கிரகப் போராட்டத்தை நேர்நேராகப் பார்வையிடும்படி தமிழ்ப்பேசும் பகுதிகளுக்கு அண்மையில் வந்திருந்த அரசாங்ககட்சியினதும், எதிர்க்கட்சியினதும் பிரமுகர்கள் தமிழ்ப்பேசும்மக்களின் ஒற்றுமையையும் மொழிப்பற்றையும், தியாகத்தையும் விடாமுயற்சியையுங் கண்டு வியப்படைந்துள்ளனர். அரசாங்கக்கட்சியைச்சேர்ந்த கம்பகா எம்.பி. திரு. எஸ். டி. பண்டாரநாயகா கூறியதாவது, "இன்று வடக்கு—கிழக்குமாகாணங்களில் நடைபெறும் சத்தியாக்கிரகம் சிங்களமக்களுக்கு எதிரானதல்ல. [illegible] தமிழ்ப்பேசும்மக்களின் தேசிய விடுதலைக்காகவும், மொழி உரிமைக்காகவும் அவர்கள் தொடுத்துள்ள சமராகும்." யூ. என். பி. கட்சியைச்சேர்ந்த திரு. குயின்டின் பெர்னாண்டோ (நீர்கொழும்பு எம். பி) மட்டக்களப்புக்குச்சென்று சத்தியாக்கிரகத்தைப் பார்வையிட்டபின் பின்வருமாறு கூறினார். "இது தமிழரசுக்கட்சியின் போராட்டம் மட்டுமென்று சொல்லமுடியாமல், தமிழ்ப் பேசும்மக்களின் பல்வேறுகட்சிகளினதும், முஸ்லீம் மக்களினதும் மொழிஉரிமைப் போராட்டமாகக் காணப்பட்டது."

தமிழ்ப்பேசும் மக்கள் இன, மத, வேற்றுமைகளை மறந்து தங்கள் தாய்மொழியின் உரிமைக்காக ஒன்றுபட்டு அறப்போரில் ஈடுபட்டிருப்பது உண்மையில் போற்றத்தக்கவிடயமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இன்று ஞானோபதேசம் கற்பித்தல் இன்றியமையாத கடமை"

## திரிகோணமலை மேற்றிராணி ஆண்டகை அவர்களின்

# தபசுகால நிருபம்

(தொடர்ச்சி)

### ஞானோபதேசம் கற்பிக்கும் முறை

இந்த ஆயர் நிருபத்தில் இப் பரந்த விடயம்பற்றி விரிவாகவரைய இயலாது. ஆகையால், சில பொதுக் குறிப்புகளை மாத்திரம் இங்கு தரவிரும்புகின்றோம்.

முதன்முதலாக ஞானோபதேசம்கற்பிப்போர் குருக்களாய்இருந்தாலும்சரி, சந்நியாசிகளாய் இருந்தாலும்சரி, சாதாரண கத்தோலிக்கராய் இருந்தாலும்சரி சகலரும் தங்கள்தொண்டின் பரிசுத்ததனம்பற்றி உணர்ச்சியுள்ளவர்களாய் இருக்கவேண்டும். ஞானோபதேசம்கற்பிப்போர் என்றமட்டில் அவர்கள் கிறீஸ்துநாதர்தாமே திருச்சபைக்கு ஒப்புவித்த போதகப்பொறுப்பில் பங்குபெறத் திருச்சபையிடமிருந்து அதிகாரம்பெற்றுள்ளனர். அவர்கள்செய்யும் கைங்கரியம் ஒரு சாதாரணசெயலன்று. அவர்கள் ஞானஉயிரளிக்கும் கிறிஸ்தவ போதகத்தைப் புகட்டும் அலுவலில் ஈடுபடுகின்றனர். இதனிமித்தம் அவர்கள் இவ்விடயத்தில் ஆர்வமுள்ள சிரத்தை எடுக்கவேண்டும்; தங்கள் பாடங்களைத் தகுந்தவிதமாய்ஆயத்தம்செய்ய வேண்டும். தங்கள் மாணவர்கட்கு உற்சாகமூட்டக்கூடிய வழிமுறைகளைக் கையாளப் பிரயாசப்படவேண்டும். சுருங்கக்கூறின் அவர்கள் தங்கள் முழு இருதயத்தையும் தங்களது பணியில் செலுத்தவேண்டும்.

அடுத்ததாக, ஞானோபதேசப்பாடம் வேறுஎந்தப் பாடத்தைப்பார்க்கிலும் மேலானது என்பதைச் சகலமாணவர்களும் உணரச்செய்ய வேண்டும். சிறுமுகாந்திரங்களையிட்டோ, வேறுகருமங்களுக்காகவோ ஞானோபதேசப் பாடத்தை இலகுவில் நிறுத்திக் கொண்டுவந்தால் அதன் உன்னதபதவியைப் பிள்ளைகள் உணரும்படிசெய்ய இயலாது. இதற்குமாறாக, பாடசாலைப் பாடத்திட்டத்திலே ஞானோபதேசப் பாடத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். ஞானோபதேசப் பாடத்திற்கெனச் சிலவிசேஷபரிசுகள் வழங்கப்படவேண்டும். ஞானோபதேச வகுப்புகள் மற்றவகுப்புகளைப் போலவும், அவற்றிற்கு மேலாகவும், நூல்கள், விளக்கப்படங்கள், சித்திரங்கள், திரைப்படங்கள்முதலிய உபகரணங்கள் உடையனவாய் விளங்கவேண்டும்.

ஞானோபதேசக்கல்வி அண்மையில் பெரும்முன்னேற்றம் அடைந்துள்ளது. பிள்ளைகளுடைய வயதிற்கும், கவர்ச்சிகளுக்கும்ஏற்றனவும், அறிவைஊட்டக்கூடியனவுமான பலநவீனமுறைகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இப்புதிய முறைகளை ஞானோபதேச ஆசிரியர் நன்குஅறிந்து கையாளவேண்டும்.

கடந்தகாலங்களில் ஞானோபதேசப் பாடத்தைத் தனிமனனம்செய்யும் பாடமாகக் கருதிவந்தது பெரும்பிழையாகும். செபங்களைப் பிள்ளைகள் ஒரு வார்த்தையின் அர்த்தம்முதலாய்விளங்காமல் மனப்பாடமாக்கினார்கள். கேள்விகளையும், மறுமொழிகளையும் ஒன்றும் விளங்காமல் மனப்பாடம்செய்தார்கள். இந்தமுறை உபாத்தியாயருக்குச் சுலபமாய் இருக்கலாம், ஆனால் இது ஞானோபதேசக் கல்வியன்று. இவ்விதமுறை பிள்ளைகளின் ஞாபகசக்தியை வளர்க்க ஏற்றதாயிருந்தது. ஆனால், அவர்களின் கிறிஸ்துவசீவியம் விர்த்திக்கவில்லை. இத்தகைய ஞானோபதேசக் கல்விமுறை தவறானதுஎன்று சொல்லாமலே விளங்கும். ஆகவே அது காலதாமதமின்றிக் கைவிடப்படவேண்டும். செபங்களை மனப்பாடமாக்கத்தான் வேண்டும். ஆனால், அவற்றின் ஒவ்வொரு வார்த்தையின் அர்த்தமும் அறிந்துகொள்ளப் படவேண்டும். சருவேசுரனதும், திருச்சபையினதும் கற்பனைகள், விசுவாசப்பிரமாணத்தின் பிரிவுகள் என்பனவற்றைப் படித்துஅறியத்தான் வேண்டும். ஆனால், முதலில் அவைகளின் கருத்தையும், மகத்துவத்தையும் அறிந்துகொள்ளவேண்டும்.

ஞானோபதேசம கற்பித்தல் ஓர்சுலபமான கிருத்தியமல்லவென்று மேற்கூறிய குறிப்புக்கள் தெளிவாகக்காட்டுகின்றன. உபதேசிமார் வேதபோதகத்தை நன்குஅறிந்திருக்கவேண்டும் ஞானோபதேசப்பாடத்தைக் கவர்ச்சியுள்ளதும், விளங்கக்கூடியதும்ஆக்க உபதேசிமாருக்குச் சக்தி இருக்கவேண்டும். இதனிமித்தம் சகலரும் இவ்வலுவலில் ஈடுபடத் தகுதியுள்ளவர்கள் அல்லஎன்றும், இதற்குத் தெரியப்படுகிறவரும் கூடத் தகுந்தபயிற்சி பெறவேண்டும் என்றும் விளங்குகின்றது.

ஞானோபதேசம் கற்பித்தலைப்பற்றிச் சுருக்கமாய் ஆராய்ந்தபின் நமது மேற்றிராசனத்தில் கையாளப்படவேண்டிய சிலநடைமுறையான ஒழுங்குகளைத் தரவிரும்புகிறோம்.

### ஒழுங்குகள் :

1. கட்டளைக்குருக்கள் தாம் வழமையாய்தங்கும் பங்குக்கோவில்களில் ஞாயிறுவார ஞானோபதேசவகுப்புகள் நடத்தவேண்டும். (சாயந்தரம் திவ்விய சற்பிரசாதஆசீர்வாதம் இருக்கும் இடங்களில் ஞானோபதேசப்பாடவகுப்புகளை இப்பக்திமுயற்சியுடன் முடிவுக்குக் கொண்டுவரலாம்) இந்த ஞானோபதேச வகுப்புகட்குக் குருக்களின், சந்நியாசிகளின் உதவியைப்பெற்றுக்கொள்ளக் கட்டளைக் குருமார் முயற்சியெடுக்க வேண்டும். குருக்களிடமோ, சந்நியாசிகளிடமோ நேரடியாகப் பாடசாலைகளில் ஞானோபதேசம் கற்றுக்கொள்ளாத பிள்ளைகள் சகலரும் இந்தஞாயிறுவார ஞானோபதேச வகுப்புகளில் பங்குபெறவேண்டும்.

2. கட்டளைக்குருக்கள் தங்கள்பங்கின் ஸ்தாபனங்களிலும் இவ்வித ஞானோபதேசவகுப்புகள் நடாத்தக் கிழமையில் ஒருநாளைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

3. சாதாரண கத்தோலிக்கஉபாத்திமார் இத்தொண்டிற்குத் தேவைப்பட்டால், அவர்கள் தகுந்தவிதமாய்த் தெரியப்பட்டும்,பயிற்றப்பட்டும்இருக்க வேண்டும். இந்த நோக்கத்திற்காக இவர்களுக்கென ஓர்விசேஷ கிறிஸ்தவ போதக பத்திச்சபையோ, அல்லது பத்திக்கூட்டமோ அமைக்கப்படவேண்டும். இதன் முறையான கூட்டங்களில் வேத போதகத்தைப்பற்றியும், அதைப்படிப்பிக்கும் முறைகளைப்பற்றியும் தகுந்தஅறிவுரை கொடுக்கப்படல் வேண்டும்.

4. அரசாங்கத்தால் பொறுப்பேற்று நடாத்தப்படும் கத்தோலிக்கபாடசாலைகளில் ஞானோபதேசம் கற்பிக்கவிரும்பும் உபாத்திமார் கட்டளைக்குருமாரிடமிருந்து முறையான அதிகாரம் பெற்றுக்கொள்ளவேண்டும். இன்னும் இவர்கள் கிறிஸ்தவபோதகபத்திச்சபையில்சேருமாறு அழைக்கப்படல்வேண்டும்.

5. சந்நியாசசபைத்தலைவர்கள் தங்கள் ஸ்தாபனங்களில் ஞானோபதேசம் கற்பிப்போர் சந்நியாசிகளாய் இருந்தால்என்ன, சாதாரணஆசிரியர்களாய் இருந்தால்என்ன அவர்கள் தகுந்த முறையில் தெரிவுசெய்யப்பட்டும், பயிற்றப்பட்டும் இருக்கிறார்களாவென்று கவனிக்கவேண்டும்.

6 இந்த ஞானோபதேசமுயற்சியில் கட்டளைக் குருக்களுக்குத் தங்கள் உதாரமுள்ள உதவியை அளிக்குமாறு மற்றக்குருக்களையும், சந்நியாசஅந்தஸ்துள்ள சகலரையும் நாம் வினயமாய்க் கேட்டுக்கொள்கின்றோம். எமதுபிள்ளைகளைக் கிறீஸ்துநாதருடைய போதனையில் வேரூன்றிவளரப் பண்ணுவதைவிட வேறு உன்னதசேவையை இவர்கள் செய்யஇயலாது.

7. பெற்றோரே! ஞாயிறுவார ஞானோபதேசவகுப்புகளை நடாத்துவதற்குக் கட்டளைக்குருமாருக்கு வேண்டிய உதவி, ஒத்தாசைகளை உங்கள் முழு இருதயத்தோடும் கொடுக்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் பிள்ளைகள் வேதவிசுவாசத்தை எவ்வளவுக்குக் கற்றறிந்திருக்கவேண்டுமென்று நீங்களே நன்குஉணருங்கள். வளரும் பிள்ளைகளுடைய விசுவாசம் நாளுக்குநாள் ஒருசீவசக்தியாய் வலுமைபெற்றுக் கொண்டுவந்தால் தான், அவர்கள் தங்களை எதிர்நோக்கிநிற்கும் அபாயங்களையெல்லாம் மேற்கொண்டு உங்களுக்கும், திருச்சபைக்கும், தேவனுக்கும் மகிமையைக் கொண்டுவருவார்கள்.

8. நமது பிள்ளைகளுக்குக் கூடிய வேதஅறிவை ஊட்ட நாம்எடுக்கும் பெருமுயற்சி சித்திபெறுமாறு எமது மேற்றிராசனத்தின் மூன்றுகுறிச்சிகளிலும் மூன்று ஞானோபதேச வழிகாட்டிகளையும், அவர்களுடைய வேலைகளையெல்லாம் எமதுபோரால் ஒழுங்குபடுத்தி நடப்பிக்க ஓர்பிரதமவழிகாட்டியையும் இத்தால் நியமனம்செய்கின்றோம்.

### வழிகாட்டிகளுடைய கடமைகளாவன :

i. மேலே கொடுக்கப்பட்ட ஒழுங்குகள் திருப்திகரமாய்க் கையாளப்பட்டு வருகின்றனவாஎன்று கவனிப்பது.

ii. ஞானோபதேசக்கல்வி முன்னேற்றம் அடைவதற்கு இயன்ற பிரயாசைகளையெல்லாம் எடுப்பது.

iii. ஞாயிறுவார ஞானோபதேசவகுப்புகளுக்குப் பாடத்திட்டத்தைத் தயாரிப்பது.

iv. கிறிஸ்தவபோதனையில் பரீட்சைகள் நடத்துவது.

v. பிராயப் பட்டவர்களுக்கெனத் தொடர்பான துண்டுப்பிரசுரங்களைத் தயாரிப்பது என்பனவாம்.

**பிரதமவழிகாட்டி:** வண. ஹென்றி பொன்னையா சுவாமியார்.

**திரிகோணமலைக்குறிச்சி வழிகாட்டி:** வண. ஜோண் பீற்றர்சுவாமியார்.

**மட்டுநகர்க்குறிச்சி வழிகாட்டி:** வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியார்.

**கல்முனைக்குறிச்சி வழிகாட்டி:** வண. றோபேட் ஒகோர்ஸ்சுவாமியார்.

---

**புத்தக மதிப்புரை.**

## "புதிய சரித்திர இயல்"

**(2-ம்பாகம்— உலகசரித்திரம்)**

**விலை : ரூ. 3-50**

**ஆசிரியர்: ஜே. எ. ரூரூஸ் ஜயச்சந்திரா**

சரித்திர பாடத்தில் தமக்குள்ள நீண்டகால அனுபவத்தைக் கொண்டு மாணவர்கள் இலகுவில் சரித்திரத்தைக் கற்றுக்கொள்வதற்குஉதவியாகச்சிறிய விடைகளில் பெரியவிடயங்களை விளங்கவைத்தது போற்றற்குரியது. க. பொ. த. ப. பரீட்சைக்கு ஆயத்தம் செய்வோருக்கு மீட்டல் பயிற்சிக்கு இப்புத்தகம் மிகவும் பிரயோசனமாகவிருக்கும் என்பது வெளிப்படை. அனுபவ ஞானத்தின் பயனாகமிளிரும் இம்மலரை ஆதரித்து ஆசிரியரின் ஆக்க முயற்சிக்கு ஊக்கமளிக்கத் தமிழ்ஆசிரிய உலகம முன்வருமென்பது எமது நம்பிக்கை. எமக்கு அனுப்பிய பிரதிக்கு நன்றி.

ஆசிரியர்.

---

**புத்தகமதிப்புரை**

## வாய்மொழி இலக்கியம்

**(நாட்டுப்பாடல்கள்)**

**யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றம் நாட்டுப்பாடல் நடன நாடகக்குழு வெளியீடு.**

பழமைபாடிச் செழுமை தேடலில் வல்லவர்கள் ஆங்கிலேயர்கள். அவர்கள் வாழ்க்கையில் பழமையின் மணம் பரிமளிக்கின்றது. அரசியலில் முதலாய்ப் பழமைப் பண்பைப் போற்றுகிறார்கள்.

பழமை பாராட்டும் பண்பு தமிழரிடையே மறைந்து வருவது வருந்தத்திற்குரியது. பழமையைப் போற்றும் பண்பை நம்மவரிடையே பரப்பவேண்டும். பழந்தமிழ் மக்கள் நமக்களித்துச் சென்ற முதுசொங்களான இலக்கியச் செல்வங்களைப் பரப்புதல் வேண்டும். சிறப்பாக இசைத் தமிழையும், நாடகத் தமிழையும் வளர்த்தல் வேண்டும். பாமர மக்களின் கலை வாழ்வுக்கு இசையும் நாடகமும் கண்கள் போன்றவை. இவையிரண்டுமே கவின்கலைகளின்வரிசையில் முதலிடம்வகிப்பவை.

இத்தகைய பழந்தமிழ்ச் செல்வங்களைத் திரட்டித் தமிழ்மக்களிடையே பரப்பி ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்டும் பணியில் யாழ்ப்பாணப் பிரதேசக் கலைமன்றம் சிறந்த பங்கெடுத்து வருதல் பாராட்டத்தக்கது. பண்டை நாளில் நமது ஈழநாட்டில் வழங்கிவந்த சில நாட்டுப்பாடல்களைத் தொகுத்து "வாய்மொழி இலக்கியம்" என்ற பெயரில் சிறுநூலாக வெளியிட்டுள்ளார்கள்.

இதன்கண் 23 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவை கற்பனை வளமும், கருத்துச்செறிவும் கொண்ட சொல்லோவியங்களாய்த் திகழ்வதோடு நகைச்சுவையும் பயந்து நிற்கின்றன. பாடல்களின் ஓசைநயமும், உவமை நயமும் கற்பவர்க்கு இன்பம் பயப்பனவாகும். எனவே, இச்சிறுநூல் பள்ளிப்பிள்ளைகளுக்கும், தமிழினிமையை அனுபவிக்க விரும்புறும் இரசிகர்களுக்கும் பெருவிருந்தாக உதவும் என்பதற்கெட்டுணையும் ஐயமில்லை. இத்தகையபணி ஈழநாட்டின் கலைவளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஆக்கிவைக்கும் என்பதே எமது பெருநம்பிக்கையாகும். கலைமன்றத்தாரின் தமிழ்த்தொண்டு சிறப்படைவதாக!

எமக்கனுப்பிய பிரதிக்காக நன்றி கூறுகின்றேம்.

---

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நான் அநேக வருடகாலமாகக் கொடிய தொய்வினால் வாதைப்பட்டு எவ்வித சிகிச்சைகளுக்கும் குணமுறாது ஈற்றில் பரிசுத்த திருமுகத்தினிடம் மன்றாடிவந்தேன். வருத்தம் படிப்படியாகக் குறைந்து இப்போது இரண்டுவருடகாலமாகப் பூரணகுணமடைந்தேன். பிரசுரதாமதத்திற்கு மன்னிப்புக் கோருகிறேன். என்மரணவேளையிலும உதவிபுரிவாராக. மேலும், எனது பிள்ளையின் விவாகத்தையிட்டுப் பரிசுத்த சதாசகாயமாதாவிடமும், அர்ச். சூசையப்பரிடமும் கேட்ட மன்றாட்டும் கிடைக்கப்பெற்றேன். இவர்கள் நாமம் புகழப்படுவதாக.

ஓர் அடியாள்.

திருக்குடும்பக்கன்னியர்மடம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப்பேசும் மக்களின் சத்தியாக்கிரகம்

## பட்டினி போடுவதுதான் நோக்கமா?

"கச்சேரியைக் காப்பாற்றி மக்களைப் பட்டினிபோடுங்கள் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்போலும்"

யாழ்ப்பாணம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சமாஜத்தின் காரியதரிசி திரு. ரி. கே. இராசசேகரம் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட அறிக்கைக்கு மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது: மொத்த விற்பனவுச் சங்கங்களுக்குப் பங்கீட்டரிசி வழங்காமலிருப்பதும், கொழும்பிலுள்ள விவசாயிகள் நிலையங்களிலிருந்து யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பெரிய சங்கங்களுக்குக் கோதுமைமா கொடுக்கும் பழைய முறையை நிற்பாட்டியிருப்பதும் இப்பகுதிகளில் வாழும் ஆறு இலட்சம் மக்களைப் பட்டினி போட்டு வாட வைப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்பதைக் காட்டுகிறது.

## சிக்கன நடவடிக்கையைக் கையாளுங்கள்

கூப்பன் அரிசி விநியோகத்தை நிறுத்தி மக்களைப் பட்டினிபோட முயலும் அரசாங்கத்திற்குப் பதிலளிக்கு முகமாகச் சிக்கன நடவடிக்கையொன்றை ஆரம்பித்துவைக்குமாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் எம். பி. சத்தியாக்கிரகிகளுக்கு உத்தரவிட்டதுடன் பொதுமக்களுக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

இதன்படி இனிமேல் சத்தியாக்கிரகிகளும் ஏனையோரும் ஒரு நேரச் சோறும, மற்ற நேரங்களில் வடை முதலிய சிற்றுண்டிவகைகளையும் மட்டும் உட்கொள்வர்.

## வட்டமேசை

### மகாநாடுதான் ஏகவழி

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவரும் சத்தியாக்கிரக இயக்கத்தைத் தீர்த்துவைப்பதற்கு வட்டமேசை மகாநாடு ஒன்றைக் கூட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சித்தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா மாத்தளையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

## ஆட்சியாளருக்கு ஆலோசனை

இலங்கைத் தேசிய கிறிஸ்தவ சங்கத்தின் சார்பில் சத்தியாக்கிரகத்தை நேரில் பார்வையிட்ட விசேஷ போதகர் குழு பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளது:

சத்தியாக்கிரக இயக்கம் எங்ஙனம் ஆரம்பமாயிற்றெனினும் இன்று அது தமிழ்ப்பேசும் மக்களின் ஒருமுகப்பட்ட போராட்டமாகக் காட்சியளிக்கின்றது. சிறுபான்மையினராகிய தங்களது அடிப்படை உரிமை மறுக்கப்பட்டதின் அநீதியை உணர்ந்தே இப்போராட்டத்தை அவர்கள் நடத்துகின்றனர். அது மிகவும் அமைதியாகவும, கட்டுப்பாடோடும் நடாத்தப்படுகின்றது. தகுந்த முயற்சி இப்போது எடுக்கப்படின் மொழியுரிமையே குறிக்கோளாகவுள்ள இவ்வியக்கத்தை, ஒரு முடிவுக்குக் கொண்டுவரலாம். இம் முயற்சியை எடுக்க அரசாங்கத்திற்கே பொறுப்பு உண்டு. ஆகவே, நிலைமையைத் தூரதிருஷ்டியுடன் அவதானித்து நம்நாட்டு மக்களின் எதிர்கால தேசியஒற்றுமையை உருவாக்கப் பின்வரும் நடவடிக்கைகளை கையாளுமாறு ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

1. சத்தியாக்கிரகம் சாத்வீக முறையில் நடைபெற்று வருகிறபடியால் இராணுவப்படை வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து வாபஸ் பெற வேண்டும்.
2. அரசகரும மொழியின் நிலையைத் தாக்காமல் தமிழை ஓர்தேசிய சிறுபான்மையினரின் மொழியாகப் பிரகடனம் செய்து, அதை வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஆட்சி மொழியாக (அங்கு வசிக்கும் சிறுபான்மையினரின் உரிமைகளைத் தாக்காத முறையில்) உபயோகித்துவர அரசாங்கம் அனுமதிஅளிக்க மனம் கொள்ளவேண்டும்.

### 'அதிக உணவு பயிரிடுக'

உணவுத் தட்டுப்பாடு அதிகமாய் ஏற்படாது பார்த்துக்கொள்வதற்கென்று தமிழரசுக்கட்சி உருவாக்கியுள்ள தற்காலிக பொருளாதாரத் திட்டம் ஒன்றிலே, சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டிருக்கும அதேசமயம் "அதிக உணவு பயிரிடுக" என்ற பிரசார இலக்கத்திலும் அது ஈடுபட்டுள்ளது. அதன்படி, சாமி, தினை, குரக்கனாகிய சிறு தானியங்களையும், மரவள்ளி, இராசவள்ளி முதலிய கிழங்குவகைகளையும் உற்பத்தி செய்து, இதன்மூலம் ஓரளவிலே உணவுத் தட்டுப்பாட்டைத் தீர்க்கமுடியுமென்று பொதுமக்களைத் தூண்டிப் பிரசாரஞ் செய்யப்பட்டு வருகிறது.

### வான்விபத்தில் பலருக்குக்காயம்

அத்தனகலையைச்சேர்ந்த கொங்கதெனியாவிலே சென்றசனிக்கிழமையன்று பிரயாணிகளை ஏற்றிச்சென்ற வான்ஒன்று கலியாணவரவேற்பு ஒன்றுக்குச்செல்வதற்காகப் பஸ்வண்டியை எதிர்பார்த்துக் காத்துநின்ற ஒருசனக் கூட்டத்தின்மீது மோதியதால் 60வயதுடைய எம் முடியான்சேஎன்பவர் அந்தஇடத்திலேயே உயிர்மாண்டார். சனக்கூட்டத்தில்நின்ற பத்துப்பேர் காயமடைந்தனர். வானில்பிரயாணஞ் செய்த ஐந்துபிரயாணிகளும் காயமடைந்தார்கள்.

### பஸ்சலார் ஏற்றத்தாமதம்

நிகழும்பங்குனிமாதம் 19-ந்திகதியன்று பஸ்பிரயாணசலார்கள் ஏற்றப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் பெற்ரோலுக்கும், மோட்டார் உபகரணங்களுக்கும் வரியேற்றங் காரணமாக இன்னும்ஏறக்குறைய இரு மாதங்களில் திரும்பவும்சலார்களை ஏற்றவேண்டிய அவசியம் ஏற்படுமென்று சொல்லப்பட்டது. அவ்விதம் ஏற்றுவதாலே இன்றும்ஏறக்குறைய 80லட்சம்ரூபா அதிகவருமானம் கிடைக்கும். ஆனால், பஸ்சலார்களை இம்மாதம் 19-ந்திகதியன்று ஏற்றுவதில்லையென அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்தச்சலார்ஏற்றம் அடுத்த வைகாசிமாதம்வரை பின்போடப்பட்டிருக்கிறது. அதற்கிடையில் சலார் ஏற்றத்தை நிறுத்துமுகமாக இலங்கைப்போக்குவரத்துச்சபைக்கு 35லட்சம்ரூபா உபமான்யமாக வழங்குவது பற்றி அரசாங்கம் கலந்தாலோசிக்கும்.

### வேலையில்லாத சிங்கள ஊழியர்கள்

யாழ்ப்பாணக் கச்சேரியில் வேலைகள் தடைப்பட்டுவிட்டமையால் அவற்றிற்கெனக் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட சிங்கள அரசாங்க ஊழியர்கள் முப்பதுபேரும் கடந்த ஒரு வாரமாக வேலையற்றிருக்கின்றார்கள். கச்சேரிக் கட்டடத்துக்குள்ளேயே படுக்கை, சாப்பாடெல்லாம் இவர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. வேலையற்றிருந்தும் இவர்களுக்குச் சம்பளத்துக்கும், விசேஷ 'அலான்' ஸுக்கும் குறைவில்லை.

### பருத்திக்கு உத்தரவாத விலை

பருத்தியின் விலையும் இப்போது உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அவ்விதம் கொண்டுவருவதாலே இலங்கையில் பருத்திச் செய்கையை அதிகரிக்கச் செய்யலாமென்று காணிமந்திரி கூறுகின்றார் தற்போது அம்பாந்தோட்டையிலே பருத்தி பெருந்தொகையாகச் செய்யப்படுகிறது. அங்கே இவ்வருடம் சுமார் 41,000 அந்தர் பருத்தி விளையுமென மதிப்பிடப்படுகிறது. பூநகரிப் பகுதியில் பருத்தி செய்யும் திட்டம் ஒன்றை ஆரம்பிக்கக் காணி மந்திரி உத்தேசித்திருக்கின்றார்.

### முத்துக்குளிப்பு பலன் தரவில்லை

சிலாவத்துறையிலே இருயந்திரப் படகுகளுடன் சென்ற7-ந்திகதி ஆரம்பமான முத்துக்குளிப்பு இம்முறை பலன் தரவில்லை. பொதுசன ஆதரவுக்குறைவாலும், ஏலவிற்பனையிலே வெகுவாக விலைகுறைந்தமையாலும் முத்துக்குளிப்பை நடத்துவதா அன்றேல் நிறுத்துவதாஎன்று கடற்றொழிற்பகுதி சிந்திக்கின்றது. கொழும்பிலே முகத்துவாரத்தில் ஒவ்வொன்றும் சுமார்800 சிப்பிகள்கொண்ட மூடை ஒன்று சென்றவாரம் 30ரூபாவாகத்தான் ஏலத்தில்விற்பனையாயிற்று அதனால், செலவும்,வரவும் சரிவாகத்தான் இருக்கிறது. ஆனால்,சென்றவருடம் ஒருமூடைசிப்பிகள் 400ரூபாவாக ஏலத்தில் விலைபோயின. முகத்துவாரத்தில் தற்போது ஏலவிற்பனை நிறுத்தப்பட்டு மூடை ஒன்று 30ரூபாவீதம் விற்கப்படுகிறது. உள்ள நிலைமையை அவதானித்து முத்துக்குளிப்பை நிறுத்துவதா அல்லது நடத்துவதாஎன்று தீர்மானிக்கப்படவிருக்கிறது.

# உள்நாட்டுச் செய்திகள்

### இராணுவலொறி— கார்விபத்து

யாழ்ப்பாணம் கனிஷ்டதொழில்நுட்பக் கல்லூரியை அடுத்துள்ள வீதிச் சந்தியிலே சென்றஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இராணுவலொறி ஒன்றும், மோட்டர்கார்ஒன்றும் மோதியமையால் கிளிநொச்சி வனபரிபாலன பகுதி றேஞ்சரான திரு. சோமசுந்தரம் வைத்தியலிங்கம் அதேயிடத்தில் உயிர்துறந்தார். அதேவனபரிபாலன பகுதியில் ஒருகிளாக்குவாகக் கடமையாற்றும் திரு. நடராசா மகாதேவா பலமானகாயமடைந்து யாழ்ப்பாண அரசினர்பெரியஆஸ்பத்திரியிலே ஆபத்தானநிலையில் இருந்துவருகிறார். காரும், லொறியும் மோதியதில் சந்தியிலிருந்து பலஅடி தூரத்துக்குக் கார் லொறியினல் கொண்டுசெல்லப் படலாயிற்று. கார்நொறுங்கிக் கண்ணாடிகள் சுக்கல்சுக்கலாகிச் சுக்குநூறாகியது. இராணுவ லொறியின் சாரதியான இராணுவத்தைச் சேர்ந்த ஏ. டி. விமலசூரியவின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டபின் இம்மாதம் 27-ந் திகதியன்று யாழ்ப்பாண மஜிஸ்றேற் முன்பாகச் சமுகமளிக்குமாறு ஆயிரம் ரூபா பிணையில் விடப்பட்டுள்ளார்.

### அதிகரிக்கும் மருந்துச்செலவுகள்

சுகாதாரப்பகுதியின் மருந்துச்செலவுகள் வருடந்தோறும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. சென்ற1960-ம் ஆண்டிலே 2 கோடியே 90 லட்சம் ரூபாவுக்குமேல் மருந்துகள்வாங்கச் செலவிடப்படலாயிற்று. இவ்வருடச் செலவு கடந்தவருடத்திலும் 1 லட்சத்து 50 ஆயிரம்ரூபா அதிகமாகும். கொழும்பிலுள்ள ஆஸ்பத்திரிகளுக்கு மாத்திரம் மருந்துகள்உதவ 67 லட்சத்து 63 ஆயிரம்ரூபா வருடந்தோறும் செலவாகின்றது.

### அடையாளக் காட்டுகள் இல்லை

தேர்தல் காலத்திலே வாக்காளரை அறிமுகப்படுத்தும் அடையாளச் சீட்டுகள் வழங்கப்படவேண்டுமென்ற கருத்தை மந்திரிசபை இப்போது கைவிட்டுள்ளது. அரசாங்கம் இதுவிஷயமாய் ஐந்துவருட காலமாக ஆலோசனை செய்து வரலாயிற்று. இதனை நிறைவேற்றிவைக்குமுகமாக வேண்டிய விபரங்களைச் சேகரிப்பதில் பல்வேறு அரசாங்க பகுதிகளும் அதிக பணத்தையும், நேரத்தையும் செலவிட்டிருக்கின்றன. அடையாளச் சீட்டுகள் வழங்கும் யோசனையை அரசாங்கம் கைவிடுதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, அவைகளை வழங்குவதிலும், பின்னர் பாதுகாப்பதிலும் ஏற்படக்கூடிய பெருந்தொகைப் பணச்செலவேயாகும். இந்தச் சீட்டுகளைத் தயாரித்து வழங்க ஆரம்பத்திலே அரசாங்கத்துக்கு ஒரு கோடி ரூபாவும், பின்னர் வருடந்தோறும் ஐந்துலட்சம் ரூபாவும் செலவேற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

### புதையல் எடுக்க முயன்றவர்

குருநாகலைச்சேர்ந்த 30 வயதுடைய துவான் கிச்சில் டார்விலிஸ் என்பவன் புதையல் ஒன்றை எடுக்கும் நோக்கமாகப் 12 வயதுள்ள துவான் நிசாம் என்ற பாலியனை வெந்துறுவீவா என்ற நீர்ப்பாசன குளக்கட்டிலுள்ள தனிமையான ஓர் இடத்துக்குத் தந்திரமாக அழைத்துச் சென்று, நெருக்கிக் கொன்று, அவனது உடலில் ஒரு பகுதியை வெட்டியெடுத்து அகப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருக்கிறான். பாலியனின் பிரேதம் பிறகு அக்குளத்திலே கண்டு எடுக்கப்படலாயிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| ✝ | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஒ. | ஒருசந்தி நாள் |

### பங்குனி மாதம்—1961

| | | | |
|---|---|---|---|
| 19 | ஞா. | 1 திருப்பாடுகளின் ஞாயிறு (வி. ம.) | ஊ |
| 20 | தி. | 1 தேவமாதாவின் பத்தாவும் திருச்சபையின் பாதுகாவலருமான அர்ச். சூசையப்பர் (காலதின ஞா., வி. ம.) | வெ |
| 21 | செ. | காலதினம் (அர்ச். ஆசீர்வாதப்பர் ஞா.) | ஊ |
| 22 | பு. | காலதினம் | ஊ |
| 23 | வி. | காலதினம் | ஊ |
| 24 | வெ. | காலதினம் (வியாகுல மாதா ஞா.; அர்ச். கபிரியேல் ஞா.) | ஊ |
| 25 | ச. | தேவமாதா மங்களங் கேட்ட திருநாள் (காலதின ஞா., வி. ம.) | வெ |

சத்திய வேத

# பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
பங்குனிமாதம் 16-ந் திகதி

## அறநெறியா அன்றேல்? மறநெறியா?

தமிழ்ப்பேசும்மக்கள் வடக்கு-கிழக்குமாகாணங்களில் நடாத்தி வரும் சத்தியாக்கிரகஇயக்கத்தின் வெற்றிகரமான சாதனையையும், சத்தியாக்கிரகிகள் கடும்வெயிலையும், பெருமழையையும் பறுவாய்செய்யாது மிக அமைதியாகவும், கட்டுப்பாடாகவும் மறிபல் இயக்கத்திலே கலந்துகொள்வதையும் அறிய வந்த பாராளுமன்ற அரசாங்க கட்சி அங்கத்தவர்கள் தாலும் அதிசயிக்கின்றனர். இந்த மொழிஉரிமைப்போராட்டம் தமிழரசுக் கட்சியினல்மட்டுமல்ல, தமிழ்ப்பேசும்இனம் முழுவதாலுமேநடாத்தப்படுவதைக் கண்டு தெளிகின்றனர். தமிழரும், முஸ்லீம்களுமாகிய தமிழ்ப்பேசும் மக்களெல்லாம் இப்போராட்டத்தை ஒற்றுமையாகவும், ஒழுங்காகவும் நடாத்திவரக்கண்டு பிரமைகொள்ளுகின்றனர். தாய்மொழிஉரிமைக்காகப் போராடுவதற்குத் தமிழ்மக்களுக்கு எத்துணை கடமையும், உரிமையும் இருக்கின்றதோ அத்துணைகடமையும், உரிமையும் தமக்கும் உண்டென்பதை முஸ்லீம்மக்களும் சத்தியாக்கிரகத்தில்குதித்துத் துலாம்பரமாகக் காட்டிவருகின்றனர். முஸ்லீம்மக்களுக்குத் தாய்மொழி தமிழ்மொழியே; அதனுல் அதற்குக் கிடைக்கவேண்டிய சமத்துவம் கிடைக்க வழிவகைசெய்ய வேண்டுமென உறுதிபூண்டு, பத்திரிகைமூலமும், வானெலி மூலமும் அரசாங்கஆதரவாளரான கல்விமந்திரி ஜனப் மாமூதும், சர்ருசீத் பரிதும் விடுத்த அறிக்கையை உதறித்தள்ளிவிட்டு மனேற்சாகமாக மொழி உரிமைப்போரில் ஈடுபடுகின்றனர். "இன்றுஉன்முறை, நாளை என்முறை" என்றசுலோகத்தையும் அவர்கள்உணராமலில்லை.

பிரதமர்சிறிமாவின் வகுப்புவாதக்கொள்கையையும், தனிச்சிங்களசட்டத்தையும் எதிர்த்து இன்றுநடைபெறுவது ஓர்அகிம்சாபோராட்டம். சத்தியாக்கிரக போராட்டம். தமிழ்ப்பேசும்மக்களின் சாத்வீக உரிமைப்போராட்டம். கட்சிச்சார்பற்றமுறையில் நடைபெறும்போராட்டம். அவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அறப்போராட்டம். ஒரேவசனத்தில் கூறுகிறதானுல், இலங்கைவாழ்தமிழ்ப்பேசும்இனம் இறுதிவரை அடிமையாகவாழ்வதா? அன்றேல் அடிமைத்தளைநீங்கிச் சுதந்திர வாழ்வுபெற்றுச் சுதந்திரமாக வாழ்வதா? என்பதைநிர்ணயிக்கும் ஒருசிவ-மரணப்போராட்டமே. இப்போராட்டத்தின் வெற்றியில்தான் அவ்வினத்தின் வாழ்வு தங்கியுள்ளது. ஆனுல், இன்றையஅரசாங்கம் சத்தியாக்கிரகம்என்பதின் அர்த்தம்இன்னதென்று புரியாமையினுலே கண்மூடித்தனமாக இருக்கின்றது. ஆனுல், தமிழ்ப்பேசும்மக்களின் இந்தஉரிமைப்போராட்டத்தை எந்தச்சக்தியாலும் நசுக்கமுடியாதென்பதை அதுகண்டு கொள்ளும்காலம் வந்தேதீரும்.

ஆங்கிலேயர் இலங்கையை வெற்றிகொண்டு ஆட்சிசெய்யத் தொடங்கிய அக்காலத்திலே மலைநாட்டுச் சிங்களவர்கள் சுதந்திரத்தைப் பாதுகாக்குமுகமாகத்தமதுஉயிரைத்தரும்பாகத்தானும் மதியாது அவர்களை எதிர்த்து இறந்தபோராடினர்கள். இவர்களை வெற்றி கொள்ள முடியாதெனக்கண்ட ஆங்கிலேயதளபதிகள் இனிஆற்ருதென்றுகண்டு "மறநெறி" என்ற நவீன அடக்குமுறையைக் கையாண்டார்களெனச் சரித்திரத்தில் படித்திருக்கிறேம். அதாவது "கல்லடிசிற்பன் போனவழி காடுமேடெல்லாம் தவிடுபொடி" என்றவாருய், எதிர்ப்பட்டமரங்கள் பயிர்பச்சைகள், ஆடுமாடுகள், வீடுவாசல்கள், தோட்டந்துரவுகள் அனைத்தையும் ஈவிரக்கமற்ற— மனிதாபிமானமற்ற முறையில் பரிநாசஞ்செய்வதாகிய "மறநெறி"யைக் கையாண்டு அவர்களை ஒருவாறுஅடிபணியச் செய்தார்கள்.

அங்ஙனமாக, இராணுவபலத்தாலும், பொலிஸ்பலத்தாலும் தமிழ்ப்பேசும்மக்களின் சாத்வீக சத்தியாக்கிரகசமரை மட்டந்தட்டமுனைந்த அரசாங்கம் அது பலியாததுகண்டுபோலும் அவர்களைப் பட்டினிபோட்டுமடக்க முன்வந்துள்ளது. பங்கீட்டரிசியையும், மாவையும் வழங்குவதைத் தடைசெய்வதன்மூலம் அது பொருளாதாரமுற்றுகை நடவடிக்கையில் இறங்கிச் சத்தியாக்கிரகிகளைப் பசிப்பிணியால் வாட்டிவதைத்து அவர்கள் தமது மொழிஉரிமைப் போராட்டத்தைக் கைவிடப்பண்ணவே இந்தத்தந்திர[illegible] தொடங்கியிருக்[illegible] சிறைச்சாலைகளிலுள்ள கொலைகாரருக்குத்தானும் உணவுவழங்கும் அரசாங்கம் சத்தியாக்கிரகம் நடக்கும் இடங்களையெல்லாம் பசிபட்டினியாலே முற்றுகையிட்டுக்கொல்ல முயல்வது மனிதாபிமானமற்ற செயலேயாகும். "கத்திமுனையில் தமிழ்ப்பேசும் இனத்தை அடக்கிவிடமுடியுமா? இந்தநாட்டிலே தேசீயசிறுபான்மை இனத்தவரைப் பூண்டோடு அழித்துவிட்டால் இப்பொழுது தமிழ்ப்பேசும் மக்கள்நடாத்தும் போராட்டத்தை நிறுத்திவிடமுடியுமா?" என்ற கம்பஹாப்பிரதிநிதியின் கேள்விகளையே நாமும் இந்த வேளைகேட்கின்றேம். அரசாங்கத்தின் பட்டினிபோடுஞ்செயலை அறநெறி என்பதா? அன்றேல் மறநெறி என்பதா?

நிற்க,ஏழைகளுக்கு உதவிப்பணம் கொடுபடவில்லையே; காசநோயாளருக்கு உபகாரப்பணம் கொடுபடவில்லையே; அரிசிப்பங்கீடுவழங்கப் பாதையில்லையே; பிறப்புத்தாரதரப் பத்திரங்களை அனுப்பிவைக்க முடியவில்லையே; வெள்ளக்கஷ்ட நிவாரணம் வழங்கப்படவில்லையே என்றெல்லாம் இச்சந்தர்ப்பத்திலே அரசாங்கம் ஓலமிடுவதைக் கவனிக்கும்போது ஆடுநனைகிறதென்று ஓநாய்அழுது ஓலமிட்ட கதையே நமது ஞாபகத்தில் வருகின்றது. இன்னும் எமது நாட்டில் இன்று ஏதோஅவசரகாலநிலைமை ஏற்பட்டாற்போன்று அரசாங்கம் வானெலி மூலம் தமிழுணர்ச்சிப்பாடல்கள், பக்திப்பாடல்களைத்தானும் ஒலிபரப்பப்படாதென்று உத்தரவிட்டிருப்பதானது, தமிழ்ப்பேசும்இனத்தின் உரிமைப்போராட்டம் உச்சநிலை அடைந்துகொண்டிருக்கிறது என்பதை [illegible] ஒருசெயலா[illegible]வேறென்ன?

## திருப்பாடுகளின் சிந்தனை

திருப்பாடுகளின் காலத்தில் திருச்சபையானது நமதாண்டவரின் திருப்பாடுகளை நாம் தியானித்து அவற்றிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களைச் சிந்தித்துத் தபயசெய்ய வேண்டும் என்று நம்மைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

யேசுநாதர் தமது பாடுகளின் தொடக்கத்திலே ஜெத்சமனித் தோட்டத்திலே செபிக்கிறுர். துணைக்கு மூன்று சீடர்களை அழைத்துச் செல்லுகிறுர். ஆனுல், அவர்கள் அசட்டையுடன் நித்திரை செய்வதைக்கண்டு அவர்களைத்தட்டிஎழுப்பி, விழித்திருந்து செபம் செய்யுங்கள் என்று சொல்லுகிறுர். உலகஆசாபாசங்களுக்கு நம்மை அடிமைப்படுத்தி விடாமல் நம்மை ஒறுத்துச் சில தபக்கிரிகைகள் செய்யவேண்டும் என்று நமக்கு இதன் மூலம் காட்டியிருக்கிறுர்.

வயல்வெளியிலுள்ளபுற்களை வருடாவருடம் பருவகாலங்களில் வெட்டிவிடவேண்டுமல்லவா? இவ்விதமே நமது ஆத்தும விஷயத்திலும் நாம் துர்நாட்டங்களையும், ஆசாபாசங்களையும் நாளுக்குநாள் அடக்குவது அவசியம். இதற்குத் தபமேசிறந்தவழியாகும்.

ஒருவன் தன்னைத்தானே அடக்கி ஆளுவதன் மூலமும், பிறரால் வரும் கஷ்டங்களைச் சகிப்பதன் மூலமும், பொறுமை என்னும் புண்ணியத்தை அனுசரிப்பதன் மூலமும் அதிஉன்னத தபத்தை அனுசரித்து வரலாம் என்று யேசுநாதர்தாமே தமது திருப்பாடுகளின் மூலம் செயலில் காட்டியுள்ளார். சிலுவைமரத்தில் தொங்கிக்கொண்டிருக்கும்போது பிதாவைப் பார்த்து இவர்கள் அறியாமல் செய்கிறுர்கள் என்று தம்மை வாதித்தவர்களுக்காக வேண்டிக்கொண்டார். இதன் மூலம் எமக்குப் பிறரால் வரும் கஷ்டங்கள், அவமானங்கள், துன்பங்கள் முதலியவற்றை நாம் பொறுத்து பிறர்சிநேகம் என்னும் புண்ணியத்தைக் கடைப்பிடித்து அவர்களுக்காக ஆண்டவரிடத்தில் மன்ருடவேண்டுமென்று நமக்குப் படிப்பிக்கிறுர். மேலும் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்பட்டார். திருமுகத்தில துப்பப்பட்டார். திருச்சிரசில் முண்முடி சூட்டப்பட்டார். ஆனுல், "மனுமக்களை இரட்சிக்க வேண்டும், சருவேசுரனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும்" என்று பொறுமையாய் இருந்தார். நாமும் நமக்குவரும் கஷ்ட துன்பங்களில் அவரைப் பின்பற்றி நடப்போமாக! அவருடைய திருப்பாடுகளைத் தியானிப்பதன்மூலம், அவர் எவ்விதம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக அநேகபாடுகளைப்பட்டுச் சிலுவைமரத்தில்தொங்கித் தமது திரு உயிரை விடுத்தாரோ அவ்விதமே நாமும் தேவனின் சித்தம் எம்மில் நிறைவேறக்கடவது என்று பொறுமையோடு இருப்போமாக. நமக்குச் சோதனை வரும் தருணங்களில் அவருடைய திருப்பாடுகளைத் தியானிப்போமாக. ஆயிரக்கணக்கான தபமுயற்சிகள் உண்டு. ஆனுல், சரீரவாதனையும், மனேவாதனையுமே மகாகடின தபசாகும். வியாதி, கஸ்தி, காலவேற்றுமை, அதாவது மழை, பனி, வெய்யில் முதலியவற்றுல் ஏற்படும் கஷ்டம், வேலைக்கஷ்டம், பிறரால் ஏற்படும் எதிர்ப்பு, அநியாயக் குற்றச்சாட்டுகள், சக்தி சாமர்த்தியம் இல்லாமை இவை யாவும் தபசில் அடங்கியுள்ளவையாகும். இவற்றினுல் ஏற்படும் இன்னல்களை யேசுநாதருடைய திருப்பாடுகளோடு ஒருமித்து அவர் அனுசரித்த பொறுமை என்னும் புண்ணியத்தை அனுசரிப்பதன் மூலம் இந்தத் தபசை ஒரு நாளைக்கு நூறுதடவை, இன்னும் ஒரு மணிக்கு நூறுதடவை முதலாய் உபயோகிப்போமாக! "என்னைப் பின்பற்ற விரும்புகிறவன் தனக்குள்ள யாவற்றையும் விட்டுவிட்டுத் தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்னைப் பின்பற்றக் கடவானுக!" என்று யேசுநாதசுவாமி மொழிந்திருக்கிறுர். இப்படிப்பனையில் நாம் பூரண விசுவாசமாயிருப்போமாக. யேசுநாதர் தாமே நம்மிடம் கேட்காமல் நமக்குத்திட்டம் பண்ணுகிற சிலுவையே எப்போதும் உத்தமமானதும், ஆபத்தில்லாததும், தெய்வீகமானதுமென்றும் நிச்சயமாயிருப்போமாக! சருவேசுரன் காத்திலிருந்து நோய் நமக்கு வருகிற சகல சோதனை உபத்திரவங்களில் அவரை ஆராதித்துத் தோத்திரித்துப் புகழ்வோமாக! சுபாவமாய் நமக்கு உண்டாகும் வெறுப்பின்மேல் ஜெயங்கொண்டு நம் முழுஇருதயத்தோடு அவர் சித்தம்போல் ஆகக்கடவது என்று சொல்லுவோமாக; விசேஷமாய்த் திருப்பாடுகளின் ஞாயிறு தொடக்கம் பெரியசனிக்கிழமை வரையும் நம் பாவங்களுக்குப் பரிகாரமாய்த் திருச்சபையால் குறிக்கப்பட்ட பரித்தியாகங்கள், ஒறுத்தல்கள், ஒருசந்தி முதலிய தபக்கிருத்தியங்களைச் செய்து நம் பாவங்களுக்குப் பொறுத்தலடைவோமாக! — அ. யேசுதாசன்

### நன்றித்துதி

அர்ச். அந்தோனியாரிடம் இரந்து கேட்ட மன்ருட்டு கிடைக்கப்பெற்றேன். நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

B. S. T.

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராச கோத்திரத்திற் பிறந்த ஏழை



**அரச குலத்திற் பிறந்த மகன் அன்றாடம் அயராது உழைந்தார். தாவீதன் குமாரன் தரித்திரனானார். எண்ணற்ற புண்ணியப் புகழ் படைத்தவர் இலைமறை காய்போல் வாழ்ந்தார். பூவுலக மகிமைகளின்பேரில் பற்று வையாமல் பொன்னுலக உடைமைகளின் அதிபதியானார். இராச கோத்திரத்தில் அவர் மனம்பொருந்தி ஏழையாக இருந்தார். ஞானச் சமுத்திரமாகிய அவர்தாம் சூசைமாமுனிவர் என்பதை நாம் அறிவோம்.**

தேவதூதர்கணம் வீழ்ந்து பணியும் தேவாதிதேவனுக்குக் கட்டளையிடப் பூவுலகிலே ஒரு மனிதன் பிறந்தார். இஃது எத்துணை பெருமை! எவ்வளவு அதிசயம்! எண்ணவே முடியாத புதுமை! மனிதர்கள்மத்தியிலே இவ்வளவு மகிமைப்பிரதாபன் இனிப் பிறக்கவே முடியாது. "அவர் நீதிமானாய் இருந்தார்" என்று வேதாகமம் இரத்தினச் சுருக்கமாகக் கூறும் வாக்கியமொன்றே அவரது ஒப்புயர்வற்ற மகோன்னதத்தின் உரைகல்லாய் இலங்குகின்றது.

சூசைமாதவன் இவ்வுலக வாழ்வில் இலைமறை காய்போல் வாழ்ந்தார். மௌனம் அவரது மகத்தான பொக்கிஷமாயிருந்தது. தேவ பராமரிப்பில் நம்பிக்கை நிறைந்த அமைதி அவரிடம் குடிகொண்டு விளங்கியது. அவர் வாழ்வு முழுவதுமே தேவப்பிரசன்னமாய்ப் பொலிந்தது என்று கூறுவதே சாலப் பொருந்தும். அர்ச்சிதமான உழைப்பிலே அவர் ஆழ்ந்திருந்தார். தன்னைப்பற்றித் துளி நினைவுமின்றித் தாழ்ச்சியின் உருவமாய் உலவினார். ஓயாத செபமும், ஒழிவற்ற தேவாராதனையும் அவர் திருத்தொண்டுகளாய் மிளிர்ந்தன. மேரைமரியாதையான பராமரிப்பு அவரது மேன்மைக்கு மகுடமாயொளிர்ந்தது. நல்ல விதையானது வளமுள்ள பூமியில் ஒன்றுக்கு நூறாய்ப் பயன் தருவதுபோல் யேசுநாதருடையவும், தேவதாயாரதும் திருவாக்குகள் அவரது ஆத்துமத்தில் ஆழமாய் வேரூன்றி அவரைப் புண்ணியப்பூங்காவாகப் பரிமளிக்கச்செய்தன. ஞானக்கண்ணாடிகளாகிய அவ்விருவரையும் மாதவன் சூசை உற்றுநோக்கி, அவர்களது சுகிர்த நடத்தைக்குத் தகத் தமதுவாழ்வைப் புதுக்கியமைத்துக்கொண்டார். மகாத்மாவான அவரது புனிதத்துவப் பூரிப்பை நம்மால் ஊகித்துணரவே முடியாது.

அர்ச். சூசையப்பர் நசரேத்தூரில் விரத்தராய் வாழ்ந்துவந்தார். ஆதியிற் குறித்தபிரகாரம் ஆண்டவன் திருவருட் கிருபையால் அவர் எபிரேய கன்னிகையான மரியாளின் மணவாளனானார். மாசணுகாத தூயகன்னிகையான மரியம்மாள் தேவவார்த்தையாற் கர்ப்பந் தரித்துத் தேவதாயாகினாள். அந்நாளில் அகுஸ்துஸ் அரசனின் ஆணைப்படி குடிக்கணக்குப்பதியப் புனிதன் சூசை பெத்தலேகம் ஊருக்குப் புறப்பட்டார். பெத்தலேகம் ஊரிலே அவரது பரிசுத்த பத்தினியின் பேறுகாலம் அண்மியது. ஆனால், அவர் போய்த் தங்குவதற்கோ இடங் கிடைக்கவில்லை. தஞ்சமளிப்பாரின்றித் தவித்தார். ஈற்றிலே இரட்சாபெருமானை மாடுறையும் புன்குடிலில் மகனாய்க் கண்டார். மனங்கலங்கினார். அன்றுமுதல் அளப்பருந் துன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அவரைத்தொடர்ந்தன. கொடிய ஏரோதன் திருமகனைக் கொல்லத்தேடினான். விழிப்பும், விடாமுயற்சியும், கீழ்ப்படிதலும் நிரம்பிய பாதுகாவலர் தேவதூதனின் ஏவுதற்படி மகனையும், மாதாவையும் காப்பாற்றப் பரதேசத்தில் பல்லாண்டுகள் கழித்தார். திருக்குடும்பத்தின் பாதுகாப்பே அவரது உன்னத இலட்சியமானது.

கொடுமையின் பிடியிலே, வறுமையின் மடியிலே, கண்ணீர்ப்பிரவாகத்தின் நடுவிலே பொறுமையைப் பூஷணமாகப் பூண்டு, விசுவாச உறுதி தளம்பாது கடமையாற்றிய சூசைமாதவனின் புனிதவாழ்வு இன்றைய நமது இன்னல்களில் ஒரு தூய பற்றுக்கோடாகும். கத்தோலிக்க சத்தியமறைக்கெதிராய்க் கடினப் போர்புரியும் மதவிரோதிகளின் மத்தியில் அங்கலாய்க்கும் நமக்கு அவர் பொன்னடிகள் அசையாத ஞானாதாரமாகும். எங்கள் சின்னஞ்சிறு குழந்தைகளின் எதிர்காலத் தூயவாழ்வை—ஈடேற்றத்தை அவரது இரு மலர்க்கரங்களில் ஒப்படைக்க இஃது ஓர் அருந்தருணமாகும். கத்தோலிக்க கல்விச் சூழலில் பயில முடியாதவாறு எங்கள் குழந்தைகள் நட்டாற்றில் தவிக்கும் இந்நேரம் எங்களையும், எங்கள் குடும்பங்களையும் அவரது பிரமாணிக்கமான பாதுகாவலில் வைத்துப் பணிவோம். ஆபத்தின் தஞ்சமான அவரைத் தேடியோடுவோம். "திருக்குடும்பத்தின் தலைவரே! எங்களைக் கண்ணோக்கும்" என்று அவரை இரந்து உருக்கமாகப் பிரார்த்திப்போம்.

1847-ம் ஆண்டு 9-ம் பத்திநாதபாப்பரசர் அர்ச். சூசையப்பரைத் திருச்சபையின் பாதுகாவலராக நியமித்தார். பதினெட்டு நூற்றாண்டளவாய் அவருடைய வாழ்வுபோல மறைந்திருந்த அவரது பக்தியானது இன்று சுடர்விட்டு உலகெங்கும் சோதிபொழிகின்றது. கொழுந்துவிட்டெரியும் இந்தப் பக்திச்சுவாலையில் நாம் நமது துயரங்களின் இருளைப் போக்கியருளுமாறு அவரை நாடிச்செல்வோம். முன்னாள் "சூசையிடம் போங்கள்" என்று பார்வோன் இராசா ஓலமிட்டான். மக்கள் யாவரும் களஞ்சியங்களின் அதிபதியாகிய "சூசையை" நாடி ஓடினார்கள். அதுபோல் இந்நாள் சருவேசுரனால் தேவ களஞ்சியங்களின் அதிகாரியாக நியமிக்கப்பட்ட சூசைமாதவனிடம் நாம் அடைக்கலம் புகுவோம்.

நாத்திகத்தின் நச்சுக்கொள்கைகள் எங்கும் தீவிரமாக விதைக்கப்படுகின்றன. தீயபிரசுரங்கள் மக்களின் தூய இருதயங்களைப் பட்சிக்கின்றன. சீர்கெட்ட சினிமாப்படங்கள் ஒழுக்க வாழ்வைச் சின்னாபின்னப்படுத்துகின்றன. மதப்புரட்டர்களும், விரோதிகளும் தங்கள் மாயவலையை வீசி மக்களைப் பிடித்துப் பாழ்படுத்தக் கங்கணங் கட்டிக்கொண்டலைகிறார்கள். கிரமந்தப்பின பற்றுதல், கீழ்ப்படிதலில்லாத மமதை, தேவனைமதியாத ஈனவாழ்வு என்பன இளமுள்ளங்களை மாசுபடுத்திக் கேடுவிளைக்கின்றன. உலகின் எத்திசையை நோக்கினாலும் திருச்சபைக்கு எதிராகத் தீநாக்குகள் சுற்றிவளைத்துச் சுழல்கின்றன. இப் பயங்கரமான சூழ்நிலையிலே நின்று திருச்சபையின் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பர்தம் [illegible] வேண்டும். [illegible] அலைந்து திரிபவர்களாம் எங்களைத் தமதடைக்கலத்தில் வைத்துப் பாதுகாத்தருளுவாராக!

"யேசுவின் கைத்தாதையே! உம்முடைய திருக்குமாரன் என்றழைக்கப்படச் சித்தமான யேசுநாதரை நீர் பாதுகாத்ததுபோல இப்போது திருச்சபையைப் பாதுகாத்தருளும்" என்று அவரைநோக்கி ஓயாது அபயமிடுவோமாக. திருச்சபையின் பாதுகாவலரான சூசைமாதவனின் திருநாளைப் பங்குனித் திங்கள் 19-ம் நாள் திருச்சபை வழமையாய்க்கொண்டாடிவருகின்றது. இவ்வருடம் 19-ந்திகதி ஞாயிறு வாரத்தில் வருகிறபடியால் அர்ச். சூசையப்பருடைய திருநாள் அடுத்தநாளில் அதாவது, 20-ந் திகதி கொண்டாடப்படும்.

— M V.

---

# உண்மையைக் கடைப்பிடி

## மகாவந். தோமாஸ் பர்னாந்து ஆண்டகை (தூத்துக்குடி) அவர்களின்

# தபசுகால நிருபம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### உண்மைப் பணி

ஆதலால் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் எப்போதும் உண்மையைக் கைக்கொள்ளும் நன்மக்களாய் வாழவேண்டும். அதனால் சங்கடங்கள் ஏற்படலாம், கஷ்ட நஷ்டங்களும் உண்டாகலாம். அந்தத் துன்பங்களில் நமது விசுவாசமும் தெய்வப் பராமரிப்பில் நம்பிக்கையும் நமக்கு ஆறுதல் அளிக்கும், கடவுளின் உதவியும் கிடைக்கும்.

பொய் சொல்லுவது மட்டுமன்று, தப்பறையான கருத்துக்களும் கொள்கைகளும் உண்மைக்கு மாறானவை. நாத்திகமும் லோகாயதமும் வளர்ந்து படரும் இன்றைய உலகில் தப்பறைகளுக்குக் குறைவு இல்லை. அவைகளைப் பறைசாற்ற அச்சுப்பிரசுரம், மேடைப்பேச்சு, வானொலி, திரைப்படம், கல்வி, கலை முதலிய அறிவுச் சாதனங்கள் யாவும் பயன்படுத்தப் படுகின்றன. இந்த அபத்தங்கள் மத்தியில் தவறாவரம் பெற்ற சத்திய திருச்சபை மக்களுக்கு நன்னெறி காட்டும் கலங்கரை விளக்கமாகத் துலங்குகிறது. அது சத்திய சொரூபியாகிய கிறிஸ்துவின் வாக்கியத்தை மக்களுக்குப் போதிக்கிறது. "நீங்கள் என் வாக்கியத்திலே நிலைத்திருந்தால் மெய்யாகவே என்னுடைய சீஷர்களாய் இருப்பீர்கள். சத்தியத்தையும் அறிந்துகொள்வீர்கள்" (அரு. 8 31, 32) என்றார் யேசுநாதர். உண்மையை அறியாதவன் பாவத்துக்கும் பசாசுக்கும் அடிமையாகிறான். நம்மைச் சுதந்திரரும் புண்ணியவான்களும் ஆக்குகிற யேசுக் கிறிஸ்துவின் வாக்கியத்தில் நிலைத்திருக்க வேண்டுமானால் முதலில் அவ்வாக்கியத்தை ஞான உபதேசத்திலும் பிரசங்கங்களிலும் கேட்டு அறிந்துகொள்ளவேண்டும். இது அடிப்படையான கடமை. இக்கடமையைச் செய்யாதவர்கள் எப்படி உண்மையைக் கடைப்பிடிக்கும் நல்ல கிறிஸ்தவர்களாய் வாழமுடியும்?

இரண்டாவது, கேட்டறிந்த உண்மையை மனதில் சிந்தித்து உள்ளூறப் போற்றவேண்டும். எண்ணங்களும் ஆசைகளும் கிறிஸ்துவ உண்மைகளுக்கு மாறாக இருந்தால் கிறிஸ்துவின் வாக்கியத்தில் நிலைத்திருப்பது எங்ஙனம்? அதுபோலவே, சுயநலத்துக்காகவோ அல்லது முகத்தாட்சண்யத்தினாலோ கிறிஸ்துவ வாழ்க்கையின் நன்முறைகளை விட்டு விடுகிறவனும் விட்டுக் கொடுக்கிறவனும் எப்படிச் சுயாதீனமாய் வாழ இயலும்?

மூன்றாவது அறிந்த உண்மையைச் சொல்லிலும் செயலிலும் கடைப்பிடிக்கவேண்டும். எதார்த்தமும் நேர்மையும் வாழ்க்கையைக் கண்ணியப்படுத்துகின்றன.

இப்படி உண்மையை அறிந்து அதன்படி வாழ்வதோடு, அதைப் பரப்பவும் வேண்டும். "உலகில் எப்பகுதியிலும் அச்சம் இன்றிக் கடவுளின் கற்பனைகளுக்கு எதிர்மறையான கொள்கைகள் உண்மையைப் பகைக்கும் சாத்தானுக்குரிய சதித் திட்டங்களுடன் பறை சாற்றப்படுவதைக் காண்கிறோம். எனவே, ஒவ்வொருவரும் உண்மையின் ஒளியில் மூழ்கி, வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் அது விளங்கும்படி நடந்துகொள்வதுடன், அறிவைப் பரப்புவதற்கும், அதன் உரிமைகளைக் காப்பதற்கும், மக்களின், சிறப்பாக இளைஞரின், உள்ளங்களில் அதை ஆழப் பதிக்கவும் உண்மையின் அப்போஸ்தல சேவை புரியவேண்டும்" என்று அறிவுரை கூறுகின்றார் பரிசுத்த பாப்பரசர்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

## நீலிக் கண்ணீர்

**அன்புமிக்க இளைஞர்களே !**

கடந்தசில வாரங்களிலே உலகத்தின் அநேகதேசங்களில் ஒருசிலர் கண்ணீர் ததும்பிய கண்களுடன் நம் கொங்கோபிரதமர் லூமும்பாவின் கொலையையிட்டு அனுதாபங்காட்டி நின்றனர். இலங்கையிலேயும் கொம்யூனிச பிரமுகர்கள் குனிந்ததலையுடன் துக்கங் கொண்டாடினர். கண்ணீர்சிந்தாத ஏனையோரைச் சுட்டிக்காட்டிக் குற்றஞ்சாட்டினர்.

மடிந்தோரைக்குறித்துத் துக்கம்காட்டுவது முறையேயாயினும், துக்கங் காட்டிநிற்போர் யாரென்பதையும் அவதானித்தல் நன்று. அண்மையில் திபேத்திலே செஞ்சீனப்படைகள் உருவியவாளுடன் புத்தகுருக்களையும், புத்தஆலயங்களையும் சின்னபின்னமாக்கியபோது, ஓர்துளிகண்ணீராவது இவர்கள் கண்களால் ஓடியதாயில்லையே. பழையகாலத்தில் காட்டுமிராண்டிக் கூட்டங்கள் ஐரோப்பாவின் ஊடாய்ச்சென்று புரிந்த மயிர்சிலிர்க்கும் பாதகச்செய்கைகளையும், சிந்தின இரத்தவெள்ளத்தையும் எம்நூற்ருண்டில் ருஷியா, சீனமுதலிய செங்கொடிநாடுகள் வென்றுவிட்டனவே. ஐரோப்பாவில் நூற்றுக்கணக்கான மேற்றிராணிமாரும், ஆயிரக்கணக்கான குருமாரும், இலட்சக்கணக்கான கிறீஸ்துவர்களும் இரத்தமுழுக்கு ஆடும்படி ருஷியாசெய்தபோது ருஷியமோகம்கொண்ட நம்நாட்டவர் எவராவது கண்ணீர் விடவில்லையே. அவர்கள் இப்போது லூமும்பாவையிட்டுக் கசிவது ஏனோ?

அன்புமிக்க இளைஞர்களே! புத்தநாடாகிய திபேத்தில்நடைபெற்ற அகோர கொலைகளும், நாடுகடத்தல்களும் கொம்யூனிசசீனாவின் வல்லகரத்தினுல் நடைபெற்ற செயல்களானதால் அவற்றைப்பற்றி யாதோர்கண்டிப்பும், துக்கமும் காட்டாமலிருந்துவிட்டு, இப்போது லூமும்பாவின் கொலையொன்றையிட்டு இவ்வளவு வருத்தப்படும் 'பெரியோ'ரின்மனதில் பாராட்டுக்குரிய என்ன நியாயம் தான் இருக்கலாம்? ஏமாந்துபோகாதீர்! காரணமின்றிக் காரியமில்லை!

ஞானப்பிதா

—(—)—

# அன்பின் அரவணைப்பு

(செல்வி லூட்ஸ் அருள்ானந்தம்)

பன்னீராண்டுகளாய் வாடிய வதனத்துடன் சேயையிழந்து, உருக்குலைந்து வாழ்ந்த மேரியின்வதனம் அன்று எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தது. ஆம், அன்று அவள் தனது தேடற்கரிய திரவியத்தை விலையேறப்பெற்ற முத்தை அவளது அன்புப் புதல்வனை பன்னீராண்டுகளாகப் பாவச்சேற்றில் அமிழ்ந்தி உளத்தூய்மையைக் கெடுத்துத் தீயநண்பரின் நாசவலையிற் சிக்குண்டு அன்னையை மறந்து தேசாந்திரியாக, ஊதாரிப்பிள்ளையாக அலைந்து திரிந்த அமலநாதனைத் தன் வேண்டுதலால் மனம்மாறிப் புது மனிதனாக மனஸ்தாபக் கண்ணீருடன் வந்தடைந்த மைந்தனைக் கண்டடைந்து விட்டாள். அவளது ஜெப வேண்டுதல் கேட்கப்பட்டுவிட்டது.

அமலநாதன் இத்தனைகாலமும் கல்நெஞ்சக்காமாந்தகப்பாதகக்கொடியனாக, யேசுவைக் கயவரிடம் காட்டிக் கொடுத்த கொடிய யூதாசைப்போல் வாழவைத்தது என்ன? அவனது அன்னையின் குற்றமா? இல்லவே இல்லை. பாலிய வயதில் மாசற்ற மங்காத சிலனாய் வாழ்ந்த அமலநாதனின் கரங்களில் உள இன்பமளிக்கும் உத்தம சஞ்சிகைகள் தவழ்ந்தன. அவற்றைப்படித்தான், சிந்தித்தான். ஆண்டவரின் அன்பை அறிந்தான். அத்தகைய உத்தம நூல்கள் தவழ்ந்த அமலநாதனின் கரங்களில் இன்று பாவச் சேற்றிலே மனிதனை விழவைக்கும் தீய நூல்கள் தான் காட்சியளித்தன. அவனது உளத்தூய்மையைக் கொலை செய்யும் கொடிய ஆயுதமாக அக்கொடிய நூல்களமைந்தன. அந்நூல்களால் தான் அவன் கல்நெஞ்சப் பாவியானன். பன்னிரு வருடங்களாக அன்னையை மறந்து வேற்றூர் சென்று பொதுவுடைமைக் கொள்கைகளைப் பரப்பும் தொண்டனாக வாழவைத்தது அத்திய பிரசுரங்களேயாகும். அமலநாதனின் தீய நடத்தையைக் கேள்வியுற்ற அவனது அன்னை அணைகடந்த துயர வெள்ளத்தில் மூழ்கினாள். அனுதினமும் மகனின் பிரிவையும், அவனது பாவச்சீவிய நிலைமையையும் எண்ணி வருந்தினாள். தனது உணவை மறந்தாள். உலக இன்பங்களை மறந்தாள். சிலுவையில் தொங்கும் யேசுவின் பாதத்தில் சரணடைந்தாள். அல்லும் பகலும் அவளது கயல்விழிகளிலிருந்து கண்ணீர் பெருவெள்ளமாய் ஓடியது. கைகளில் அன்னையின் ஜெபமாலைக்கற்கள் உருண்டன. இப்படிப் பன்னீராண்டுகளாய் மேரி மகன் மனந்திரும்ப ஜெபித்தாள்.

தபசுகாலம் அண்மியது. மேரி தனது வேண்டுதலைப் பெருக்கினாள். அமலநாதன் வேற்றூரில் தீவிரமாகப் பொதுவுடைமையைப் பரப்பினான். அன்றொருநாள் அவன் தனது அறையில் படுத்துறங்கச் சென்றான். அந்நேரம் அவன் முன்னே ஓர் பாடுபட்ட சுரூபம் தொங்கியது. உடலெங்கும் காயங்கள் நிறைந்து அவற்றிலிருந்து குருதி பெருவெள்ளமாய் ஓடிக்கொண்டிருந்தது. பார்ப்பதற்குப் பரிதாபமான கோலத்துடன் பிரமாண்டமான ஒரு சிலுவையில் அறையுண்டு காட்சியளித்தார் யேசுநாதர். கல்மனதையும் கசிந்துருகப் பண்ணக்கூடிய சோகக் கோலத்துடன் காட்சியளித்த யேசுவின் பாடுபட்ட சுரூபம் அமலநாதனின் கல்நெஞ்சை மெழுகுபோல் கசிந்துருகப் பண்ணியது. தனது தீய நடத்தையை எண்ணி வருந்தி அமலநாதன் யேசுவின் பாதத்தில் முகங்குப்புற வீழ்ந்து கதறினான். அச்சமயம் 'மகனே! நீ செய்த கொடிய பாவங்கள் என் உடலைச் சித்திரவதை செய்தன. இனிமேல் உனது பாவங்களுக்குப் பரிகாரம் செய்யலாம். எழுந்திரு" என்ற ஓசை அமலநாதன் செவியில் பட்டது. விழிகளை உயர்த்திப் பார்த்தான். சிலுவையில் அறைந்திருக்கும் தனது வலது கரத்தை எடுத்து யேசுநாதர் அமலநாதனை அரவணைத்தவண்ணம் தோன்றிமறைந்து சென்றார். இந்த அன்பின் அரவணைப்புடன் அமலநாதன் உத்தமனானான். தன் அன்னையிடம் சென்று தனது தீய செயலுக்கு மன்னிப்புக் கேட்டான். புது வாழ்க்கையைத் தொடங்கினான். அமலநாதனைப் போன்ற பாவிகள் பாரில் இன்று ஏராளமாக இருக்கின்றனர். அவர்கள் எல்லோரும் இத்தபசுகாலத்தில் மனந்திரும்பித் தமது அன்பினால் அரவணைக்கப்பட வேண்டுமென யேசுநாதர் ஆவல்படுகிறார். அந்த ஆவலைப் பூர்த்திசெய்ய நாம் எமது செபத்தையும், தபத்தையும் பன்மடங்கு பெருக்குதல் வேண்டும்.

# சுவிசேஷ வியாக்கியானக் குறிப்புகள்

— B. W. J. —

## 21. நிக்கோதேமு — அரு. III. 1-21

**(1) இரவிலே (2)** — யேசுவின் பகிரங்கசீவியத்தின் முதலாம் வருஷத்திற்றானே யூதர் அவரை எதிர்க்கத் தொடங்கிவிட்டார்கள். நிக்கோதேமு யூதர்களுக்குள்ளே பிரபுவாய், அதாவது சனட்றின் சங்கத்தின் அங்கத்தவராய் இருந்ததனால் யூதர் அந்தச் சங்கத்தில் நின்று தன்னைத் தள்ளிவிடக்கூடும் என்று யோசவ் அருமைத்தேயாவைப்போலப் பயப்பட்டிருக்கவேண்டும் (அரு. xix. 38.) ஆனபடியாற்றான் நிக்கோதேமு யேசுவைக்காண இரவிலேவந்தார்.

**(2) இந்த அற்புதங்களை (2)** — ஆகையால் நிக்கோதேமுவின் சந்திப்புக்குமுன் யேசுவின் போதனையும் அற்புதங்களும் யூதேயாவில் கொஞ்சக் காலமாக நடைபெற்றிருக்கவேண்டும்.

**(3) அவனுக்கு மறுமொழியாக (3)** — அருளப்பர் நிக்கோதேமுவின் கேள்வியைக் கொடாமல் யேசுவின் மறுமொழியைக் கொடுக்கிறார். நிக்கோதேமு மெசியாவின் இராச்சியத்தைப்பற்றி வினவியிருக்கவேண்டும். யூதராகப் பிறந்தவர்கள் எல்லாரும் அந்த இராச்சியத்தைச் சேர்ந்தவர்கள் என்று மற்றப் பரிசேயரைப்போல நிக்கோதேமுவும் நினைத்திருக்கலாம். யேசு அந்தப் பிழையான எண்ணத்தைத் திருத்துகிறார்.

**(4) மறுபடியும் பிறவாதிருந்தால் (3)** — இதை "உன்னதத்திலிருந்து பிறவாதிருந்தால்" என்று சிலர் மொழிபெயர்க்கிறார்கள். ஆனால், நிக்கோதேமு "மறுபடியும்" என்றுதான் விளங்கிக்கொண்டார் என்று 4-ம் வசனத்திலிருந்து அறிகிறோம். நாம் மாமிசப் பிறப்பினால் ஆதாமின் பாவ தோஷத்தில் பங்குபற்றுகிறோம். ஆனால், ஞானஸ்நானப் பிறப்பினால் புதிய ஆதாமாகிய யேசுவின் பிரசாதத்தில் பங்குபற்றுகிறோம். யேசு இஸ்பிரீத்துவை அனுப்பியே பிரசாதத்தைக் கொடுக்கிறார். பிரசாதமில்லாமல் சருவேசுரனுடைய இராச்சியத்தில் பிரவேசிக்கமுடியாது.

**(5) இராச்சியத்துள் பிரவேசிக்மாட்டான் (3)** — இதனுடைய சரியான மொழி "இராச்சியத்தைக் காணமாட்டான்." மற்றமூன்று சுவிசேஷகர்களும் பொதுவாகப் பாவிக்கும் "சருவேசுரனுடைய இராச்சியம்" என்ற சொல்லை அருளப்பர் இந்த இடத்தில் (3–5) மாத்திரம் பாவிக்கிறார். "இராச்சியம்" என்பதற்குப் பதிலாக அருளப்பர் "சீவியம்" என்ற சொல்லையும், பாவிலுவானவர் "நீதி" என்ற சொல்லையும் பொதுவாகப் பாவிக்கிறார்கள். இந்த மூன்று சொற்களின் கருத்து, "சுபாவத்திற்கு மேலான ஞானச்சீவியம்" அல்லது "பிரசாத நிலை."

**(6) ஜலத்தினாலும், இஸ்பிரீத்துசாந்துவினாலும் (5)** — ஞானஸ்நானம் இரட்சணியத்திற்கு அவசியம். ஞானஸ்நானத்தில் பாவத்தைக் கழுவி ஆத்துமத்தைப் பரிசுத்தப்படுத்தும் பிரசாதத்திற்கு வெளி அடையாளமும், கருவியும் ஜலம்தான். ஆனால், அந்தப் பிரசாதத்திற்கு உட் காரணம் இஸ்பிரீத்துவே. அதனால்தான் நாம் ஜலத்தினாலும், இஸ்பிரீத்துவினாலும் பிறக்கவேண்டும் என்று யேசு சொல்லுகிறார்.

**(7) மாம்சமாம் (6)** — ஏன் புதிய பிறப்பு அவசியம் என்பதை யேசு விளங்கப்படுத்துகிறார்? ஞானஸ்நானத்திலே இன்னுமொரு மனிதசுபாவத்தையல்ல, தேவசுபாவத்தையே பெறுகிறோம். ஆகையால், அதற்கு மாமிசப் பிறப்புப் போதாது; ஒரு புதிய ஞானப்பிறப்பே வேண்டும். யேசு இதற்கு ஓர் உதாரணம் காட்டுகிறார். காற்றின் சத்தத்தை நாம் கேட்டாலும் அதன் போக்குவரத்து எம் பார்வைக்கு எட்டாது. அத்தன்மையே ஞானப்பிறப்பை அதன் பயன்களிலிருந்து அறிகிறதொழிய, அது எம் உணர்ச்சிக்கு எட்டாது (8-ம் வசனம்).

(தொடரும்)


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2727**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

உரும்பிராய்
வைத்திலிங்கம் கந்தையா
— வழக்காளி.
எதிராக, இருபாலை
கந்தையா காசிலிங்கம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2727-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர் துண்டுக்காணி 1961-ம்ஆண்டு சித்திரை மாதம் 25-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 10,170-உம, இனனும் ரூபா 7,500-க்கு 27-2-59 தொடக்கம், 3-9-59 வரையும் 100-க்குப் 10%வட்டியும், பின் கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரையும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 314 ரூபா 91 சதமும்.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோயிற்பற்று, இருபாலைஇறை "சீத்தைக் கட்டியும், பொன்னம்பலவளவும்" ப. நி. இ. $8\frac{1}{4}$-உம், கல்வீடுகளும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். இந்தப்பரப்பு எட்டேகாலுக்கும் எல்லை: கிழக்கு — பொன்னையா சரவணமுத்துவிற்கும், பங்காளருக்கும், சின்னத்தம்பி பெண்பறுபதத்திற்கும் உரிய ஆதனங்கள். வடக்கு — ஒழுங்கை. மேற்கும், தெற்கும்—கை ஒழுங்கை. இதடங்கலும்.

**செ. இரத்தினசபாபதி,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.

நம். 45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். 13-3-61


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளிர் மன்றம்

# கிறிஸ்தவ மங்கையின் இலட்சியப்பண்பு

"பெண்களினால் உயர்வாகிடுமே – புவிவாழ்விலே தானே," என்று பாடினார் புலவர். ஆம்! இது உண்மையே. ஞானி, மோனி, புலவன், வீரன், அரசன், தியாகி, குரு ஆகிய அத்தனை பேரையும் உலகுக்களிப்பவள் பெண். "தொட்டிலை ஆட்டும் கை உலகை ஆளுங்கை" என்ற கூற்றுப் பொய்யாகுமா? இத்தகைய பேராற்றலை பெண்ணுக்கு அளித்தார் கடவுள் அவளின் பிறப்புரிமையாக. ஏன்? கடவுளே! பரிசுத்த கன்னிகைமூலம் உலகிற் தோன்றி உலகை இரட்சித்தாரெனில் பெண்களின் பெருமையைப் பன்னவும் வேண்டுமா? ஆனால், பெண்ணின் இலட்சியம் என்ன? அவள் அலட்சியமின்றிப் பொன்னெனப் போற்றிப் புகழ் அடைய வேண்டுவதுதான் என்ன?

கற்பே பெண்ணின் சிறந்த ஆபரணம்; அவளின் ஒளி. பெண்ணின் கற்பைக் காக்கும் அரணாக இலங்கவேண்டியது அடக்கத்துடன் கூடிய நாணம். தமிழ் நாட்டுப் பெண்களைப்பற்றி நூல்கள் வியந்து கூறுகின்றனவே. அவர்களிடம் விளங்கிய கற்பொழுக்கத்தினாலன்றி வேறெதனால்?

"சீறாய் விளித்தாள் சிலைவேடன் அவ்வளவில் நீறாய் விழுந்தான் நிலத்து" என்றும், கண்ணகி மதுரையையெரித்தாளென்றும் இப்படியாகத் தமிழ்ப் பெண்களின் இலட்சியப் போக்கை உயர்ச்சியுறப் படித்து உளங்களிக்கின்றோமே. எதனால்? அவர்களிடம் அமைந்த இலட்சியப் பண்பாம் சீரிய கற்பொழுக்கத்தினாலன்றோ! காரியம் இப்படியிருக்க, புகழ்மிக்க தமிழ் மரபிலுதித்த சில தையல்கள், அதுவும் கிறீஸ்தவ மங்கையர்கள், அடக்கமின்றி, நாணமிழந்து நாகரீகமென்று சொல்லி நாலுபேர் நையாண்டிபண்ணி நகைக்க, நாணங்கெட்ட வாழ்வு வாழ்கின்றார்களே! "பெண்கள் வீட்டில் அடங்கியிருந்தது அந்தக்காலம்; சமூகத்தில் ஆணுக்குச் சமனாய் வாழ்வது இந்தக் காலம்" என்றும் காலம் மாறி நாகரீகம் வளர்ந்துவரும் இந்நாட்களில் பட்டிக்காட்டார்போல வாழத் தெரியாதவர்களா நாங்கள் என்று, கெட்டித்தனம்பேசிக் குட்டிக்கெறுக்குடன் மட்டித்தனமாய் நடக்கும் மங்கையரைப்பற்றி யாது சொல்வது! நாலுபேரைப்போல நாமும் நடந்தாலல்லவா உலகம்மதிக்கும்; அல்லது நம்மைப் பார்த்துக் கேலிபண்ணுமேயென்று போலிநியாயம்பேசி, பெண்களின் இலட்சியம் இழந்து வாழும் நங்கைகள் தங்கள் மூச்சுக்கொண்டு, பெற்றோர் சொற்கேளாது நடப்பதும், சினிமாப்படங்கள் கேளிக்கைகளுக்குச் செல்வதும், நாகரீகமென்று நாரிதெரிய உடை உடுத்துவதும், மெல்லிய ஆடைகளை அணிந்து துல்லிய மேனியை எல்லோரும் காணட்டும் என்றாற்போல எடுப்பான போக்கில் அலங்கோல உடை அணிவதும், சொண்டுகள் நகங்களுக்குச் சாயம் பூசுவதும், காதற் கடிதங்கள் எழுதுவதும்தானா? சீர் பெற்ற தமிழ்ப்பெண்கள் பண்பு? கிறீஸ்தவ மங்கையினரின் சுகிர்த அடக்கம் இதுவா? மானமற்ற வாழ்வை விரும்பும மனிதரும் உண்டா? ஒவ்வொருவரும் தத்தம் நிலையில் வழுவா தொழுகுதலே மானம், அன்றேல் அவமானம். அப்படியாயின் பெண் தன்னிலையாம் அடக்கம் நாணம் தவறி நடத்தல் அவளுக்கு அவமானமன்றோ! இதனை இன்றைய பெண்ணுலகம் உணர்ந்தாலோ! புனிதமரி தேவதாயின் புனிதத்தன்மை எங்கள் கிறீஸ்தவமங்கையர்களுக்கு எவ்வளவு படிப்பினையைத்தான் அளித்து நிற்கின்றது! அப்படியிருந்தும், கிறீஸ்தவப் பெண்களே கேவலம் உடுபாவனையில் இலட்சியக் குறைவாய் நடக்கின்றனர்! தேவாலயங்களில் இவர்களின் அலங்கோலமான ஆடைக்காட்சி ஆடவரையும் நாணமடையச் செய்கின்றதே. சினிமாமண்டபங்கள் போலல்லவா தேவாலயங்கள் திருநாள் நாட்களில் பெண்களின் உடையினால் காட்சியளிக்கின்றன. நேரிய உளம்படைத்த காரிகை ஒருத்தி இதைக் கூறுகின்றாளென்று தாபம் கொள்ளாதீர்கள். காரணம் யாதென கூர்ந்து யோசித்து இலட்சியப்பண்பையடையும்படியாகவே இதைக் கூறுகின்றேன். பெண்மணிகளே! விளிப்புடன் காரியத்தை ஆய்ந்துபாருங்கள். எங்கள் பெண்மணிகளிடம் உயரிய இலட்சியப்பண்பும், அடக்கமான போக்கும், உடுபாவனையில் மரியாதையும் விளங்கவேண்டுமென்று விழைகின்றேன். இலட்சிய யுவதிகளே, இதுவிடயம் குறித்து இந்தத்தபசுகாலத்தில் நல்லதீர்மானங்களை எடுத்துக்கொள்ளுங்கள். பெண்ணினத்தின் பெருமையைக் காப்பாற்ற வீரியத்துடன் முனையுங்கள். படித்துப்பட்டம்பெற்ற பெண்மணிகளே! சாதாரண பெண்களும் உங்களைப்பின்பற்றி நல்வாழ்வு வாழ, இலட்சிய வழியில் வீறுடன் நடந்து நல்வழிகாட்டத் தெண்டியுங்கள். உலகம்பெறும் நன்மையடையும் உங்களின் இலட்சிய வாழ்வால்.

"ஔஃபீலியா"

# கிறிஸ்தவ குடும்பங்களின் கஷ்டங்கள்

### பரிசுத்த தந்தையின் பேருரை

கிறிஸ்தவ குடும்பங்கள் "லௌகிக நிலையிலும், வைதீக முறையிலும் இக்கட்டனுபவிக்கின்றன. வேலையின்மையினாலோ, தராதரத்திற்குக் குறைந்த வேலையினாலோ, கொடிய வறுமையினாலோ லௌகிக நிலையில் சோதிக்கப்படுகின்றன", எனப் பரிசுத்த தந்தை 23-ம் அருளப்பர் திருக்குடும்பத் திருநாளன்று சம்பேதுரு சதுக்கத்தில் குழுமி நின்ற 25,000 மக்களுக்குக் கூறினார். வத்திக்கான் வானொலி அஞ்சல் செய்த இப் பேருரையை இத்தாலியிலுள்ள குடும்பங்களெல்லாம் கேட்க இத்தாலியவானொலி ஏற்பாடுசெய்தது.

**இடர்ப்பாடுகள் :**

"பிள்ளைகளின் கல்விக்காகப் பெற்றோர் தம்மை ஒறுத்துப் பரித்தியாகம் செய்ய வேண்டியிருப்பதால் அவர்கள் வைதீகமுறையில் இடர்ப்படுகின்றனர். இன்பத்தை நாடும் உலகப்போக்கின் மத்தியில் கடவுளின் மாறாத கற்பனைகளுக்குப் பிரமாணிக்கம் காட்டுவதனாலும் விழுமிய ஒழுக்க மனச்சாட்சியாகிய காவலைக் காப்பாற்ற விரும்புகிறபடியாலும் இடர்ப்படுகின்றனர். குடும்பங்களின் ஆத்மீக, பொருளாதாரத் தேவைகளைப்பூர்த்திசெய்யும்படி தாமே தகுந்த அதிகாரிகளுக்கு வற்புறுத்திக் கூறச் சந்தர்ப்பங்களை இழந்து விடுவதில்லை" யெனப் பரிசுத்த பிதா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் பொருளாதார வசதிகளுடனிருப்பவர்கள் ஒவ்வொருகுடும்பத்துக்கும் அதன் தேவைக்கேற்ற உதவி அளிப்பதில் உதார குணத்துடன் போட்டியிடுமாறும், அப்படிச்செய்வதனால் "**அவரவர் ஆற்றலுக்கேற்ப உழைப்பு, தேவைக்கேற்ப உதவி**" என்ற மார்க்சீய சுலோகத்துக்குக் கிறிஸ்துவ மெருகு கொடுக்கும்படி கேட்டார்.

**நெருங்கிய பந்தனம் :**

செபத்தினால் தாம் அவர்களுடன் நெருங்கிய பந்தனம் கொண்டிருப்பதாகவும், சிறுவரின் மாசறு நிலைக்கும், இளைஞரின் பரிசுத்தவாழ்வுக்கும், வயோதிகரின் அமைதியான அஸ்தமனத்துக்கும் தேவ ஆசியைக்கேட்டுச் சகல சோதனைகளையும் செயிக்கத்தக்கதாக எல்லோருக்கும் சாந்தியையும்— மனமகிழ்வையும், பரம அன்பையும் விரும்புவதாகவும் கூறிமுடித்தார்.

# "புதுமாதிரியான குடும்பம் பாருங்களேன்!"

ஐரோப்பாவில் அர்ச்சியசிஷ்ட நாடென அழைக்கப்படுவது அயர்லாந்து தேசம். அத்தேச மக்கள் கடவுள் வழிபாட்டிலும், கிறிஸ்தவ பத்தியனுசாரங்களிலும் சிறந்து விளங்கினர். **யோனும்** அவர் மனைவியும் இளம் தம்பதிகளாயிருந்தகாட் தொடக்கம் திவ்விய பூசைக்குச் செல்வதில் பிரமாணிக்கமுள்ளவர்களாயிருந்தார்கள். குளிர் அதிகமாயிருந்தாலும் பூசை அதிநேரத்துடன் இருந்தாலும அவைகளைப் பொருட்படுத்தாது நேரத்துடன் பூசைக்குத் தினமும் தவறாது போவார்கள். இவ்வண்ணம் ஒழுகும நாளில் தேவ இரக்கத்தால் புத்திரபாக்கியம் கிடைக்கப் பெற்றனர். அப்பிள்ளையின் பெயர் '**றீனி**'. எங்கள் நாடுகளில் ஒரு குழந்தை கிடைத்துவிட்டால்போதும். குழந்தையின் கஷ்டமென்றும், கணவன் கடமை அதிகம், வீட்டுவேலை ஏராளம் என வீண் நியாயம்தேடி தேவவழிபாட்டையும், கிறிஸ்துவ பக்தி யனுசாரங்களையும், அசட்டைபண்ணுவோருக்கு நமது றீனியின் குடும்பம் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆனால் யோண், அவன் மனைவி **அனி** தம் மகவுடன் தினப் பூசைக்குப்போவதில் தவறுவதில்லை. கடுங்குளிரிலும் குழந்தையுடன் செல்வர். குழந்தையின் அழுகை, சத்தம் மற்றும் தொந்தரவுகள் யாவும் அவர்களது பத்தியனுசாரத்தைக் குறைக்கவில்லை. "இவர்கள் தான் புதுமாதிரியான குடும்பம். குழந்தைக் கஷ்டம் ஒருபுறம், குடும்பக் கடமை மறுபுறம். இவைகளைவிட்டு கோவிலுக்குப் போவது முறையா? அதுவும் இந்தக் குளிருக்குள். வீட்டுக் கடமைகள் எப்படி நடக்குமோ? புதுமாதிரியான பத்திக் குடும்பம் பாருங்களேன்" என இப்படியாகப் பல கேலி மொழிகளை அள்ளி எறிந்தனர் அவ்வூரவர்.

எது வரினும் திவ்விய பூசை தமது குடும்பத்தின் ஆசீர்வாதம் எனவும், சீவிய சமாதானமவ்வழியே தமக்குக் கிட்டுமெனவும் உணர்ந்து, பிறரின் அவமொழிகளைப் பொருட்படுத்தாது தேவசிந்தை நிறைந்தவர்களாய்ப் பூசைக்குச் சென்றும், கிறிஸ்தவ கடமைகளை அனுசரித்தும் சீவித்தனர். இவ்வாறாக 'றீனி' வளருங் காலத்தில் கடவுள்சித்தமோ? கஷ்டகாலமோ அறியோம்? வறுமை அவர்களுடன் வளரலானது. றீனி பத்து வயதுப் பாலியானாள். பெற்றோர் கஷ்டநிலை கண்டு கலங்கினாள். எங்காவது சென்று பணம் தேட முயன்றாள். பெற்றோர் வருந்தினும், அவர்கள் அனுமதி பெற்று அமெரிக்கத் தொழிற்சாலைக்குச்செல்லச் சித்தமானாள். றீனி புறப்படும் சமயம் அவள் தாய் அனி, அவளை நோக்கி: "மகளே! உன்னுடைய காலை மாலை செபங்களை ஒருபோதும் மறவாதே, உன்னால் இயன்றமட்டும் ஒவ்வொரு நாளும் பூசைக்குப்போ. பசாசுக்குப் பயப்படு, உன் உலகத்தாய் தொலைவிலிருந்தபோதும் பரிசுத்த தேவதாய் உன்னைப் பாதுகாப்பா. சீவிய சமுத்திரத்திற்கு உன்னையனுப்புகிறேன். தேவனின் தெப்பமாகிய துணையால் நன்மை அடைவாய்" என நல்லுரைகள் புகன்றனுப்பினாள். பாலிய றீனியும் பயணமானாள் அமெரிக்காவுக்கு. பாவம், யாவும் அவளுக்குப் புதிய சூழ்நிலையாகவே இருந்தது. சுவாத்தியம் வேறு, சீவியமுறை வேறு. என் செய்வது, எல்லாவற்றையும் இன்பமாக ஏற்றாள். தொழிற்சாலையில் பலருடன் வேலை செய்வது அவள் வழமையாகிவிட்டது. அங்கு அதிநேரத்துடன் வேலை தொடங்க வேண்டும். என்னதான் இருந்தபோதிலும் பெற்றோரின் முன்மாதிரிகை பாலிய றீனியின் மனதில் நன்றாகப் பதிந்துவிட்டது. முன்மாதிரிகை ஒருவரைத் தன்வசமாக்கும் தன்மையுடையது. தந்தை தாய் வழியே றீனியும் திவ்வியபூசை காண்பதை ஓர் ஆசீர்வதிக்கப்பட்ட வழமையாகக் கொண்டாள். அது தன் சீவியமெனத் தீர்மானித்தாள். தினமும் திவ்விய பூசைக்குச் செல்வாள். இத்தூய பழக்கம் எண்ணற்ற நன்மைகளைக் கொடுக்கப் பின்னிற்கவில்லை. நேரத்துடன் சென்று திவ்வியபூசைக்குச் சென்றதால் தன் கடமைகளைச் செம்மையாகச் செய்து முடிக்கவும் வேலையில் நிலையுடனிருந்து வறுமையகற்றவும் வழியானது. அவளுடன் பல இளம் பெண்மணிகளும் சேர்ந்து கிறிஸ்தவ முன்மாதிரிகையில் சிறந்ததுமன்றி, அவர்களும் திவ்விய பூசைக்குச் செல்லும் வழமையை மேற்கொண்டு ஐக்கியவாழ்வில் திகழ்ந்தனர். றீனி தன் முன்மாதிரிகையாலும், அடக்கம், அமைதி, பத்தி முதலியவைகளாலும், மற்றவர்களின் கௌரவம் சங்கை, வணக்கத்திற்கு இலக்கானாள். இவ்விதம் றீனி யோண் குடும்பத்தின் முடியாய், அவர்களது வறுமை நீக்கிய செல்வியாய் விளங்கினாள். றீனியின் பத்து வயதும், இருபது, நாற்பது, எண்பது வயதாக வளர்ச்சியடைந்தது. வயோதிப தசையடைந்த நம் றீனி தினப் பூசைகாணும் நற்பழக்கத்தை விட்டுவிடாது தொடர்ந்து சென்று வருவாள். வயதின் நிலையால் நடக்கச் சக்தியற்றபோதும் உருட்டும் வண்டியில் பலிபூசைக்குச் செல்லும் பாக்கியம் பெற்றாள். இவ்வாறாகத் தேவசித்தம் அவளுக்குக் கடைசிவரை திவ்விய பூசை காணும் பாக்கியத்தை அளித்து வரலாயிற்று.

"உள்ளவனுக்கு இன்னும் கொடுக்கப்படும்" என்ற கிறிஸ்துநாதரின் வாக்கியம் இவ்விடத்திலும் உண்மையாயிற்று. "என்னைத் தேடு சகலமும் உன்னைத் தேடும்" என்ற கிறிஸ்து பெருமானின் வார்த்தையின்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புதுமாதிரியான குடும்பம் ....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

படி நீனி தேவனைத் தேடுவதில் நிலைத்திருந்தாள். தேவன் அவளையும் அவள் குடும்பத்தையும் ஆசீர்வதித்தார். இவ்வாறுகக் கடைசிவரை தன் வழமையை மேற்கொண்டு, அயர்லாந்து, ஏன் அகிலம் முழுவதும் பிரமிக்கத்தக்க முறையில் நூற்றொரு வயதுவரை சீவித்துத் திவ்விய பூசையின் இன்பமே பரிமளிக்கத் தன் சீவிய ஓட்டத்தை முடித்தாள். திவ்விய பூசையை அசட்டை செய்யும் அநேகருக்கு நமது யோண் குடும்பமும் நீனியும் ஏற்ற எடுத்துக்காட்டல்லவா? நாமும் திவ்விய பூசையைத் தினமும் காண்போமாக.

## உண்மையைக் கடைப்பிடி

(5-ம் ப்க்கத் தொடர்ச்சி)

இந்த அருஞ்சேவை செய்வதில் நம் சிறுவர்களுக்கு உண்மையின் உணர்வை ஊட்டுவது முதலிடம் பெறுகிறது. பரிசுத்த பாப்பு உரைப்பதுபோல், "தாயானவள் தன் குழந்தை பொய் சொல்லாதபடி எச்சரித்துக்கூறும் புத்திமதி உண்மை புகட்டும் முதல் பாடமல்லவா? சிறு வயதிலிருந்தே கற்றபாடமும் பயின்ற வழக்கமும் இயல்புபோல் ஆகி, அக்குழந்தை பெரியவன் ஆனதும் சொல்லிலும் செயலிலும், அவசியம் ஏற்பட்டால் வேதசாட்சியின் தைரியத்துடன், உண்மையைக் கடைப்பிடிப்பானல்லவா? இப்படி உண்மைக்குச் சாட்சி பகருவதைத்தான் இறைவன் தம் மக்கள் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கிறார்." பெற்றோருடைய இப்பெரும் பொறுப்பில் சிறப்பாக ஆசிரியர்கள் பங்குகொண்டு செயலாற்றும் கடமை பூண்டிருக்கிறார்கள். இக்கடமையைச் செய்யாதவர்கள் கடவுள்முன் கண்டிப்பான கணக்குக் கொடுக்கவேண்டியிருக்கும்.

மேலும், கத்தோலிக்கருக்கும் பிற சமயத்தவருக்கும் உண்மையை எடுத்துரைக்கும் நற்பணியைத் தனியாகவோ கூட்டாகவோ நம்மக்கள் செய்யவேண்டும். எனவே, நம்மவரில் பேசவோ எழுதவோ திறமை வாய்ந்தவர்கள் உண்மையின் சேவைக்காக அத்திறமையைப் பயன்படுத்த வேண்டும். மற்றவர்கள் இதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தியும், சலுகைகள் செய்தும் உதவி புரியவேண்டும். உதாரணமாக, கத்தோலிக்க பத்திரிகைகளை வாங்கிப் படிப்பதும், நூல்நிலையங்களை ஏற்படுத்துவதும், கத்தோலிக்க எழுத்தாளர்களையும் பிரசுரங்களையும் ஊக்கி ஆதரிப்பதாகும். அதுபோலவே சங்கங்கள் நிறுவி, அவைகளின் சார்பில் மக்களுக்கு அறிவுரைகள் நிகழ்த்த ஏற்பாடுசெய்யவேண்டும்.

### உண்மையின் சன்மானம்

இவ்வாறு, தங்கள் வாழ்விலும் பிறர் வாழ்விலும் உண்மையின் ஒளி விளங்கச் செயல்படுவோர் ஒளி மயமான இறைவனின் திருமுக தரிசனைக்குத் தகுதியுள்ளவர்களாகிறார்கள். அந்தப் பாக்கியத்தைப் பெறும்போது நட்சத்திரங்களைப்போல் என்றென்றுமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்" (தானி. 12-3).

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். சின்னத்தெரேசாவின் பெற்றோரான மாட்டீன் தம்பதிகளிடம் நான் கேட்ட மன்றாட்டு 12 மணித்தியாலங்களில் எனக்குக் கிடைத்தது. இன்னும் யேசுவின் திருஇருதயத்திடமும், அர்ச். சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார், அர்ச். அன்னம்மாள், அர்ச். டொன்பொஸ்கோ, சங். அல்போன்சா கன்னியாஸ்திரியிடமும் நான் கேட்ட மன்றாட்டுக்கள் அனுகூலமாயின. பிரசுர காலதாமதத்துக்காக மன்னிப்புக் கோருகிறேன். — இராக்கினி மாகிரேற்

# கத்தோலிக்க செய்திகள்

## மோல்தா கத்தோலிக்கரின் கண்டனம்

மோல்தா தீவில் திரு. மின்ரொவ் அவர்களைத் தலைமையாகக்கொண்ட தொழிற்கட்சி, அத்தீவின் றோமன் கத்தோலிக்க மேற்றிராணிமாரை அவமதித்ததைக் கண்டித்து 1,00000 கத்தோலிக்கர் ஓர் மாபெரும் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றினர்.

மேற்கூறிய அவமரியாதைக்கும் குறிப்பிட்டகட்சியின் பொதுவுடைமைச்சார்புக்கும் துக்கம்தெரிவிக்குமுகமாக இம்மாதம் 5-ந் திகதி மத்தியானம் மோல்தாவிலுள்ள கத்தோலிக்க ஆலயங்கள் மூடப்பட்டு ஆலயமணிகள் துக்கநாதஞ்செய்தன.

மோல்தாவிலுள்ள கத்தோலிக்க இயக்கத்தினரின் சகல சங்கங்களின் ஆதரவைக்கொண்ட பொது மேற்றிராசனச் சங்கம் இக்கூட்டத்தை ஒழுங்கு செய்து மோல்தாவின் கத்தோலிக்க அதிமேற்றிராணியாரான மைக்கல் கொன்ஜி ஆண்டகையுடன் உள்ள ஒற்றுமையைக் காட்டவும், தொழிற்கட்சித்தலைவர்கள் கத்தோலிக்க மதத்தின் மட்டில் காட்டும் "விரோத மனப்பான்மையை"க் கண்டிக்கவும் விரும்பினர். அதிமேற்றிராணி ஆண்டகை அவர்கள், திரு. மின்ரொவ் அவர்கள், "மோல்தாவிலும் மத்தியதரைக்கடற் பிரதேசங்களிலும் பொதுவுடைமை புகுந்துகொள்ள வழிதிறப்பதை"க் கண்டித்த அண்மையில் தபசுகால நிருபம் ஒன்று விடுத்தார்.

* * *

## சேமக்காலைக்கும் வரி!

கியூபாவில் கத்தோலிக்கரின் கல்லறைத் தோட்டங்களிலிருந்து வரும் சிறு வருப்படியைக் கூட காஸ்த்ரோவின் கம்யூனிஸ்ட் அரசாங்கம் பறித்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

## கத்தோலிக்க பாடசாலைகளுக்கு ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மான மாற்றங்களினதும், புது முயற்சிகளினதும் விளிம்பிலே தான் நாம் நிற்கின்றோம்" என்று கூறினர்.

### தங்கனீக்காவில் கத்தோலிக்க பள்ளிகட்கு ஆதரவு:

தங்கனீக்காவில் உள்ள கத்தோலிக்க பள்ளிகளின் நிர்வாகத்தில் அரசாங்கம் தலையிடாது என்றும், அவற்றிற்குத் தொடர்ந்து உதவிசெய்துவரும் என்றும் பிரதம மந்திரி ஜூலியஸ் கே. நியெரெறே நாட்டின் ஆசிரியர்மாநாட்டில் உறுதி கூறியுள்ளார். இவர் புகு நகரிலுள்ள ஒரு கத்தோலிக்க உயர்நிலைப் பள்ளியில் கல்விபயின்றவர். தனியார் பள்ளிகளில் அரசினர் தலையிடுதலை ஆரம்பத்திலிருந்தே கண்டித்து வந்துள்ளவர். தனியார்பள்ளிகள் நாட்டுக்குச் செய்துவரும் பெருஞ்சேவையை யாவரும் கண்திறந்து பார்த்துப் பாராட்டி நன்றிதெரிவிக்கவேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். அந்நாட்டின் கல்வித்துறையில் 100-க்கு 66 மடங்கு சேவையைத்தனியார் பள்ளிகள்தான் செய்துவருகின்றன.

● **சமாதானப்பணிக்குப் பரிசு!** நடக்கும் ஆண்டில் சுதந்திர ஆபிரிக்க நாடுகளில் சமாதானத்துக்காகவும், ஜனநாயகத்துக்காகவும் அதிகத்தொண்டு புரியும் அரசியல்மேதைக்கு 9,000 பவுண் பரிசாகவழங்கப்படும். ரோமையில் கருதினால் ஒட்டாவியானி ஆண்டகையின் தலைமையில் இயங்கும் 'அர்ச். 5-ஆம் பத்திநாதர் நிறுவனம்' இப்பரிசு வழங்க முன்வந்துள்ளது. இப்பரிசு பெற யார் தகுதியுடையவர்என்பது அடுத்தஆண்டு பெப்ரவரி திங்களில் தீர்மானிக்கப்படும். இந்தியா, ஐக்கிய அரபுக் குடியரசு, தூனீசியா, கானு, காங்கோ, இத்தாலி, பெரு, கனடா ஆய நாடுகளின் சார்பாக ஐ. நா. வில் பிரதிநிதிகளாய் இருப்பவர்கள் அடங்கிய குழுவொன்று அங்கபரைத் தேர்ந்தெடுக்கும்.

* * *

## மதச்சார்பற்ற சலுகை

7-3-58-ல் வெளியான அரசாங்க உத்தரவின்படி, மதவேறுபாடுகளைக் கவனியாமல் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் அனைவருக்கும் கல்விச் சம்பளச் சலுகை வழங்கப்படவேண்டும்.

இந்த உத்தரவை நடைமுறையில் கடைப்பிடித்துப் பாரபட்சமின்றி நடக்க சென்னை அரசினர் இப்போது முற்பட்டுள்ளனர். ஒதுக்கப்பட்டுள்ள வகுப்பினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆக யாவருக்கும் அவரவர்களுடைய பொருளாதார நிலையை மட்டும் கவனித்துச் சலுகை வழங்கப் போவதாக நிதிமந்திரி அறிவித்துள்ளார்.

* * *

## ஆந்திர அரசாங்கமும் கத்தோலிக்கபள்ளிகளும்

அரசாங்க உதவிபெறும் தனியார் பள்ளிகளிலும் ஆசிரியர்களை நியமிக்கவும், நீக்கவும் மாவட்டக் கல்வி அதிகாரிக்குத்தான் உரிமை உண்டென்று ஆந்திர பிரதேச அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பித்திருந்தது. அத்துமீறிய இந்தத்தலையீடு தவறானது என்று சம்பந்தப்பட்ட மேற்றிராசன அதிகாரிகளும், இந்திய கத்தோலிக்க சங்கமும் கண்டனம் தெரிவித்ததுடன் மத்திய அரசாங்கத்திற்கும் முறைப்பாடுசெய்தனர். இவற்றின்விளைவாக இப்போது ஆந்திரஅரசினர் மேற்கூறிய தமதுஉத்தரவை ரத்துச்செய்துள்ளனர்.

* * *

## கொங்கோவில் கத்தோலிக்கர் தொகை

| | | |
|---|---|---|
| மொத்த மக்கட் தொகை | | 1,30,00,000 |
| கத்தோலிக்கர் | | 60,00,000 |
| மேற்றிராணிமார் | ஆபிரிக்கர் | 4 |
| | ஐரோப்பியர் | 25 |
| குருமார் | ஆபிரிக்கர் | 400 |
| | ஐரோப்பர் | 2,000 |
| சந்நியாசிகள் | ஆபிரிக்கர் | 600 |
| | ஐரோப்பர் | 700 |
| கன்னியர் | ஆபிரிக்கர் | 1,000 |
| | ஐரோப்பியர் | 2,000 |
| கத். பள்ளிகளில் பயிலும் மாணவர் | | 10,00,000 |

லியோப்போல்டுவில் நகரில் ஒரு கத். பல்கலைக் கழகம் உளது. மருத்துவ, விவசாயப் பயிற்சிப் பள்ளிகள் பல கத்தோலிக்கரால் நடத்தப்படுகின்றன.

● **ஆஸ்திரியாவின் அடுத்தபிரதமர்:** ஆஸ்திரியாவில் இப்போது பிரதமராய் இருந்துவரும் டக்றர் ஜூலியுஸ்ராய் வரும் ஏப்ரல் 11-ம்நாள் பதவி விலகி ஓய்வெடுத்துக்கொள்ளப்போகின்றார். அவருக்குப்பதிலாக 63வயதுடைய டக்றர் அல்போன்ஸ் கோர்பாக் என்ற ஒருசிறந்த கத்தோலிக்கர் பதவி ஏற்பார்.

* * *

● **ரோமையில் தஞ்சம்புகுந்த ருஷியர்:** சிலநாட்களுக்குமுன் ருஷியாவிலிருந்து 200 உல்லாசப்பிரயாணிகள் ரோமைக்குவந்தனர்; வத்திக்கான் பொருட்காட்சிச்சாலையையும் பார்வையிட்டனர். ரோமைநகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு நேப்பிள்ஸ்நகருக்குப் பயணமாக யாவரும்ரயில் நிலையத்தில் கூடியபோது, ஒருவரைக் காணவில்லை. அவர் மற்றவர்களை விட்டுப்பிரிந்து இத்தாலிய அரசினரிடம் அடைக்கலம் புகுந்துவிட்டார். நிக்கோலாய் வோக்மியாக்கோவ்என்பது அவர்பெயர்; 33 வயதுடையவர்; உரால்ஸ்பகுதியைச் சார்ந்தவர்; சிறந்த தொழில்வல்லுனர்.

* * *

● **தபசுகால உண்டியல் தர்மம்:** இங்கிலாந்தில் சால்போர்டு மேற்றிராசன அதிபரான வந். பெக் ஆண்டகை ஒருதிட்டம்வகுத்துள்ளார். அதன்படி இவ்வாண்டு தபசுகாலம் முழுதும் அவரது ஆட்சிக்குட்பட்ட ஆலயங்களில் தண்டப்படும் உண்டிப்பணத்தில் பாதி வடவியெற்றுமைச்சார்ந்த வந். பாத்தியெம் ஆண்டகையவர்கட்கு அனுப்பப்படும். இவர் தமது குருக்களோடும், விசுவாசிகளோடும் கம்யூனிஸ்டுகளின் கெடுபிடியிலிருந்து தப்பியோடிவந்து, தென்வியெற்றுமில் சைகோன்நகரில் தஞ்சம்புகுந்துள்ளார்: அவர் தம்முடன் அழைத்துவந்துள்ள அகதிகளான 200 குருமாணவர்களின் தேவைகட்காக மேற்கூறியதர்மம் அளிக்கப்படுகிறது.

* * *

## வத்திக்கான் பொதுச்சங்க ஆயத்தக் குழுக்கள்

2-வது வத்திக்கான் பொதுச்சங்கத்திற்கு ஆயத்தம்செய்யப் பாப்பரசர் நியமித்துள்ள பலகுழுக்களில் அங்கத்துவம் வகிப்போரின் மொத்தத்தொகை 699 ஆகும். இவர்களுட் சிலர் பல குழுக்களில் அங்கத்துவம் வகிக்கின்றனர். ஆகவே, பதவிகளைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவற்றின் எண்ணிக்கை 715 ஆகக் காணப்படும். இப் பதவிகட்கு நியமனம் பெற்றுள்ளவர்கள் பெரும்பாலும் கருதினால்மாரும், மேற்றிராணிமாரும், குருமாருமே. ஒன்பது சாதாரண கிறிஸ்தவர்களும் இடம்பெற்றுள்ளனர். பொதுச்சங்கத்தின் பிதாக்களாய் இருக்கப்போகிறவர்களுள் (மேற்றிராணிமார்) 250 பேர் மேற்படி குழுக்களில் அங்கத்துவம் பெற்றுள்ளனர். ஆயத்தக்குழுக்களின் பதவிகள் திருச்சபையின் பொதுத்தன்மைக்கேற்ப எல்லாக் கண்டத்தினருக்கும் பின்வருமாறு பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

| கண்டத்தினர் | பதவிகள் |
|---|---|
| 1. ஐரோப்பியர் | 528 |
| 2. அமெரிக்கர் | 118 |
| 3. ஆசியர் | 43 |
| 4. ஆபிரிக்கர் | 14 |
| 5. ஓஸியானியர் | 9 |
| காலியாக உள்ளவை | 3 |
| மொத்தம் | 715 |

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday March 16-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org